# தமிழகத்தில்

# பாலினக் கண்ணோட்டத்தில்

# நிதிநிலையறிக்கை

**சமூக கண்காணிப்பகம், தமிழ்நாடு**

**2008**

**திருத்திய பதிப்பு: நவம்பர் 2008**

**<u>தொடர்புக்கு:</u>**

**சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு**
202, சித்ரா அவென்யூ, (ஷாப்பிங் காம்பிளக்ஸ்),
எண்.9, சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை - 600 094.
தொலைபேசி : 91-44- 2374 6044
பேக்ஸ் : 91-44- 2374 6107
மின் அஞ்சல் : admin@swtn.org
இணையத்தளம் : www.swtn.org

**பாலினக் கொள்கை அல்லது பாலின நிதிநிலையறிக்கை ஆக்கம் நடப்பில் இல்லை என்பமையே விட்டுவிடுங்கள். பல்வேறு வளர்ச்சிக் குறியீடுகளின்படி ஒப்பீட்டு ரீதியில் சிறந்த நிலையில் உள்ள தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் பெண்கள் முன்னேற்றம் குறித்த முழுநிறைவான மாநிலக் கொள்கை கூட இல்லை என்பது வருத்தத்திற்குரியதும் ஏளனத்துக்குரியதும் ஆகும்.**

பெண்களுக்கென்று எண்ணற்ற திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், பெண்களின் நிலை, அதிலும் தலித்துகள், பழங்குடியினர் மற்றும் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களின்நிலை இன்னமும் பெருங்கவலைக்குரிய பகுதியாகவே இருந்து வருகிறது. மாநிலத்தின் குறிப்பான சில பெண்கள் பிரிவினருக்க வறுமையையும் பட்டினியையுமே உலகமயமாக்கமும் தனியார் மயமாக்கமும் கொண்டுவந்திருக்கிறது என்பதைக் காட்டுவதற்கான பல வேர்க்கால் மட்ட அறிக்கைகள் இருக்கின்றன.**தமிழ்நாட்டின் பெண்கள் முன்னேற்றம் பற்றிய மாநில அரசின் அணுகுமுறையில் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையும் பாலின நிகர்நிலை பார்வையும் காணப்படவேயில்லை.**

**பெண்களை அதிகாரப்படுத்துவது என்பதில் ஒரு அரசு எந்த அளவு அர்ப்பணிப்புக் கொண்டதாக இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கு பாலின நிதிநிலையாக்கம் ஓர் சிறப்பான குறியீடாகும்.** தமிழ்நாட்டுப் பெண்கள் பற்றிய மாநில அரசின் கொள்கை பற்றிய பரந்துபட்ட விவாதத்தை, மக்கள் அமைப்புகளும் அரசு முகமைகளும் கட்டமைக்க வேண்டும் என்ற விருப்பத்துடன், இந்த தனி நூலை சமூக கண்காணிப்பு- தமிழ்நாடு வெளியிடுகிறது.மாநிலத்தின் பெண்களுக்கு, குறிப்பாக, தலித்துகள், பழங்குடியினர் மற்றும் உழைக்கும் வர்க்கப் பெண்களுக்கு மேலும் கூடுதல் அதிகாரம் கிடைப்பதற்கு வழிவகுக்கும் வகையில் பாலின நிதிநிலையாக்கம் ஒரு நாள் யதார்த்தம் ஆகும் என்ற நம்புகிறோம்.

இந்தத் தனி நூலை உருவாக்குவதற்கு உதவி செய்த ஒவ்வொருவருக்கும் நாங்கள் நன்றி சொல்கிறோம். குறிப்பாக, எங்களின் அனுபவம் வாய்ந்த ஆசானும் ஆய்வு வழிகாட்டியுமான **டாக்டர் பாக்கியராஜ்** அவர்களுக்கும், எங்களின் ஆலோசகரான **அருட்தந்தை ஜான் குமார்** அவர்களுக்கும், எங்களின் சக ஆய்வாளர்களான **திரு. பாபு ஜேசுதாஸ்** மற்றும் **திரு. கிருஷ்ணமூர்த்தி** ஆகியோருக்கும் எங்களின் நிர்வாகப் பணியாளர்கள் ஆகிய **திருமதி ஸ்டெல்லா ரொசாரியோ** மற்றும் **திரு.சேவியர்** ஆகியோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**காமாட்சி சுந்தரமூர்த்தி**
**ஆய்வாளர்**

**மனு அல்போன்ஸ்**
**இயக்குநர்**

## தமிழ்நாட்டில் பாலின நிதிநிலையாக்கத்திற்காக வாதாடுவது

தமிழ்நாட்டில் பாலின நிதிநிலையறிக்கையாக்கத்தைக் கொண்டு வருவதற்கான ஆதரவுப் பிரச்சாரத்தை நிகழ்த்தவேண்டும் என்று தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழுவையும் ஐவிட் ( **"Initiatives: Women in Development"-WID)** அமைப்பையும் 'தமிழ்நாட்டில் பாலினநிதிநிலையறிக்கை ஆக்கத்திற்காக வாதிடுவது' என்றஇந்தத் தனிநூலின் முதல் நகலை அடிப்படையாகக் கொண்டு சமூகக் கண்காணிப்பு தமிழ்நாடு நவம்பர் 2007ல் அழைத்தது.

இந்த இரண்டு அமைப்புகளும் மிகவும் நல்லமுறையில் ஆதரவு தெரிவித்தன. சமூகக் கண்காணிப்பு-தமிழ்நாடு-உடன் இணைந்து மாநில அளவிலான கலந்தாய்வு ஒன்றை நிகழ்த்தின.

**2008 பிப்ரவரி 1 அன்று சென்னையில் நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டம், மாநிலத்தில் உள்ள பெண்கள் அமைப்புகளின் முக்கியமான தலைவர்களையும் பெண் ஆய்வாளர்களையும் செயல்வீரர்களையும் ஒன்று சேர்த்தது. பங்கேற்றோர் தனிநூலின் உள்ளடக்கம் பற்றி தீவிரமான விவாதம் நடத்தினர். பாலின நிதிநிலையறிக்கையாக்கம் முன்னெடுக்கப்பட வேண்டிய பெரும் பணி என்பதில் அவர்கள் ஒரே கருத்து கொண்டவர்களாக இருந்தனர். தமிழ்நாட்டின் ஒதுக்கப்பட்ட பெண்களின் தேவைகளையும் பாலின நிதிநிலையறிக்கையாக்கத்தையும் பொருத்திப் பார்க்கும் குறிப்பிடத்தக்க ஆலோசனைகள் முன்வந்தன.**

அதன் பின், NAWO-Tamilnadu ஏற்பாடு செய்த "State's Accountability on Rights to Health and Women's Health Care - Gaps and Challenges" என்ற தலைப்பிலான பத்திரிகையாளர் சந்திப்பில் பாலின நிதிநிலையறிக்கையாக்கம் பற்றிய ஆய்வின் அடிப்படையில் சமூகக் கண்காணிப்பகம் விவரங்களை அளித்தது.

2008 பிப்ரவரி-மார்ச் காலத்தில், 2008-2009 நிதிநிலையறிக்கைக்கான தயாரிப்பு நடந்துகொண்டிருந்த போது, தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழுவின் ஷீலு பிரான்சிஸ் மற்றும் சமூகக் கண்காணிப்பு-தமிழ்நாடு அமைப்பின் காமாட்சி சுந்தரமூர்த்தியும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் நல்லுணர்வுள்ள அதிகாரிகளையும் சந்தித் மாநிலத்தில் பாலின நிதிநிலையறிக்கையாக்கத்தைத் துவக்குவதற்கான அவசியம் பற்றி எடுத்துரைத்தனர். தமிழ்நாட்டில் பாலின நிதிநிலையறிக்கையாக்கத்தை நோக்கி என்ற தனிநூலின் முதல் நகல் பிரதி பரவலாக வினியோகிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சனையில் தொடர்புள்ளவர்கள் மத்தியில் நடைபெறும் விவாதத்தின் அடித்தளமாக இருக்கிறது.

மாநிலத்தில் பாலின நிதிநிலையறிக்கையாக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் மிகப்பெரும் அர்ப்பணிப்போடு பணியாற்றும் தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழுவின் **ஷீலு பிரான்சிஸ்** அவர்களை சமூகக் கண்காணிப்பு தமிழ்நாடு உளமாறப் பாராட்டுகிறது. 2008 பிப்ரவரியில் நடைபெற்ற கலந்தாலோசனைக்கு சிறப்பான பங்களிப்பு செய்தமைக்காக **IWID-ன் ப்யூலா, மற்றும் நீலவல்லி** ஆகியோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## உள்ளடக்கம்

பக்க எண்.

பாகம் - I : பாலினக் கண்ணோட்டத்தில்
நிதிநிலையறிக்கை: பின்னணி

1. உலக நிலவரம் - 7

2. கருத்தாக்கம் - 11

பாகம் - II : பாலலினக் கண்ணோட்டத்தில்
இந்திய நிதிநிலையறிக்கை

3. இந்திய நிலவரம் 15

4. மாநிலங்களின் நிலவரம் - 23

5. பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம்
- அணுகுமுறை மாற்றங்கள் - 27

பாகம் - III : பாலினக் கண்ணோட்டத்தில்
தமிழக நிதிநிலையறிக்கை

6. ஆய்வு முடிவுகள் - 31

7. பரிந்துரைகள் - 43

பாகம் - IV : இணைப்புகள்

அ. பாலின நிதிநிலையறிக்கை - 46

ஆ. பாலின கருத்தாக்க வார்த்தைகள் - 49

இ. எழுதுவதற்கு உதவியவை - 52

# பாகம் I

## பாலினக் கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கை: பின்னணி

1. **உலக நிலவரம்**
2. **கருத்தாக்கம்**

# பாலினக் கண்ணோட்டத்தில்
# நிதிநிலையறிக்கை - உலக நிலவரம்

பாலினக் கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கை என்பது உலக அளவில் இன்றளவும் மிகவும் துவக்கநிலையில்தான் உள்ளது.

1970-கள் மற்றும் 1980 களில் பெண்களை மேம்பாட்டுப் பணிகளில் இணைத்துக் கொள்வது என்பதைத்தான் பெண்களின் மேம்பாடு என்பதாக கருதப்பட்டது. 1990-களில் பாலனப் பிரச்சனைகளை வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்குள் உள்ளிணைக்கப்பட்ட ஒன்றாக மாற்றுவதற்க அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதாவது, ஒட்டுமொத்த கொள்கை மற்றும் நிதிநிலையறிக்கை உருவாக்கத்தில் பாலின நோக்கை பிரதானப் படுத்துவது என்பதாக மாறியுள்ளது.

- 1995-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பீஜிங்கில் நடந்த 4-வது உலகப் பெண்கள் மாநாடு அரசின் பரந்து,விரிந்த பொருளாதார கொள்கைகளில் பாலினக் கண்ணோட்டம் இருப்பது அவசியம் என்பதை வலியுறுத்தியது.

- 2000-ம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த ஐ.நா. பொதுக்குழுவின் 23-வது சிறப்புக் கூட்டத் தொடரிலும், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச அளிவில் உருவாக்கப்படும் அனைத்து நிதிநிலையறிக்கைகளும் பாலினக் கண்ணோட்டத்தில் இருத்தல் அவசியம் என்பதை வலியுறுத்தியது. 2000-ல் ஐ.நா-வின் வளம்மிக்க ஆயிரமாவது ஆண்டிற்கானத் திட்டத்தின் 8 இலக்குகளில் பாலின சமத்துவத்தையும் ஒரு இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.

- பெண்களுக்கான வளர்ச்சி நிதியம் 20 நாடுகளுக்கானத் திட்டத்தை 2001-ம் ஆண்டில் அறிமுகம் செய்தது. நிதிநிலையறிக்கையை பாலினக் கண்ணோட்டத்தில் அரசு, குடிமக்கள் மற்றும் பாராளுமன்றவாதிகள் உருவாக்குவதற்கு உந்துதலாக இத்திட்டம் அமைந்தது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் 2005-ல் தொடங்கியது. பாலின ஆய்வுடன் கூடிய அரசின் நிதிநிலையறிக்கை என்பதே அதன் அடிப்படை நோக்கம். பாலினக் கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கையை உருவாக்குவதன் மூலம் பொறுப்பு, பங்கேற்பு மற்றும் தேசிய வரவு-செலவுத் திட்டத்தில் பாலின நோக்குநிலையை கூர்மைப்படுத்துதலை இத்திட்டம் மையமாக கொண்டுள்ளது.

குறிப்பிட்ட, இலக்கு நோக்கிய சில செயல்பாடுகளுக்கு மனித, நிதி மற்றும் பொருளாதார ஒதுக்கீடு செய்வதன் மூலம் தேசிய, பிராந்திய, சர்வதேச அளவில் பாலின சமத்துவத்தை அடைவதும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதுமே பாலின சமத்துவம், மேம்பாடு மற்றும் அமைதி ஆகியவற்றை உணர்வது மற்றும் அடைவதாகும். மேற்கூறிய நோக்கத்தை அடைவதற்கு தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச அளவிலான நிதிநிலையறிக்கை திட்ட உருவாக்கத்தில் வெளிப்படை கவனம் செலுத்துவது அவசியம்.

ஐ.நா. பொதுக்குழு,

செயல்பாடிற்கான மேடை, 2000

உலக அளவில், பல்வேறு நாடுகளில் பாலின கண்யோட்டத்திலான நிதிநிலையறிக்கை உருவாக்கப்பட்டு, ஒரு நிலையான வளர்ச்சியை அடைந்துள்ளது. இதனைச் செயல்படுத்துவதில், ஒவ்வொரு நாடும் வெவ்வேறு வழிமுறைகளைக் பின்பற்றுகின்றன. 2004-ம் ஆண்டு வரை 60 நாடுகளுக்கும் மேலாக பாலின கண்ணோட்டத்தில் வரவு-செலவுத் திட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன்மூலம், பாலின தாக்கத்தை நாட்டில் உருவாக்குவது மட்டுமின்றி, நிதிஒதுக்கீட்டில் பெண்களுக்கு கூடுதல் ஒதுக்கீடு கிடைக்கவும் வழிவகை செய்துள்ளது.

**வளம்மிக்க ஆயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்கை அடைவதற்கு, தேச அளவிலான செயல் தந்திரங்களும், நிதிநிலை அறிக்கையுடனும் ஒத்துப்போக வேண்டும். மேலும், இதனைத் தாங்கிப்பிடிக்கும் வகையில் வளர்ச்சிக்கான உலகளாவிய பங்கெடுப்பு மற்றும் ஒருவருக்கொருவர் பொறுப்புள்ளவராக இருப்பதற்கான வரைமுறைகள் அமைய வேண்டும்.**

**பான் கி மூன், ஐ.நா. பொதுச் செயலாளர்**

**பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கை பின்வருவனவற்றையும் உள்ளடக்கியது**

- **அரசின் செலவினம் மற்றும் வருவாய் குறித்த ஆய்வில் பாலின நோக்குநிலை:**
- **துறைவாரியான ஒதுக்கீடுகளில் பாலின நோக்குநிலை (உதாரணமாக, பெண்களின் மேம்பாட்டை மையப்படுத்திய சிறப்புத் திட்டங்கள்)**
- **பல்வேறு துறைகளிலுள்ள பாலின பாகுபாடுகள் மற்றும் அதனால் பெண்களுக்கு ஏற்பட்ட அநீதிகள் குறித்த ஆய்வு**
- **அரசுத் துறைகளில் சமவாய்ப்புகள் கிடைப்பது மற்றும் அதற்கேற்ற வகையில் கொள்கைகளை அமைப்பது குறித்த மறுபரிசீலனை**

## பாலின கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கை - கருத்தாக்கம்

பாலின கண்ணோட்டத்தில் தேசிய நிதிநிலையறிக்கையை உருவாக்குவது என்ற நோக்குநிலை மற்றும் செயல்பாடுகளில், வரலாற்று ரீதியாக 1980 முதல் இன்று வரை வெகுதூரம் கடந்துவிட்டோம். பெண்களுக்கான நிதிநிலையறிக்கையிலிருந்து பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கை என்ற கருத்துருவாக்கத்தை அடைவதில் ஒரு நீடித்த, நிலைத்த முன்னேற்றம் உள்ளது. (பெண்களை மையப்படுத்துவது என்பதிலிருந்து, ஆண்-பெண் உறவுநிலை மாற்றத்தை குறிக்கும் பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கைக்கான சமீபத்திய மாற்றம்). அதாவது, பாலின விழிப்புணர்வு என்பதிலிருந்து பாலின நோக்குநிலையை பிராதானப்படுத்தும் நிதிநிலையறிக்கையாக வடிவமெடுத்துள்ளது (பாலினக் கண்ணோட்டத்தில் தனியாக, மற்றொரு நிதிநிலையறிக்கையை உருவாக்குதற்கு மாறாக, தேசிய நிதிநிலையறிக்கையின் அனைத்து அம்சங்களிலும் பாலினக் கண்ணோட்டத்தை ஒருங்கிணைப்பது)

உலக அளவில், பாலினம் மற்றும் மேம்பாடு குறித்த படிப்பு ஒரு பொதுவான விஷயத்தை முக்கிய அம்சமாக வலியுறுத்துகிறது: வளர்ச்சிப் போக்கில், பிற காரணிகள் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவானதாக இருப்பதாக எடுத்துக் கொள்வோம். அந்த வளர்ச்சிப் போக்கு, ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறாக உள்ளன. அரசின் நிதிநிலையறிக்கை அதனளவில் பாலினக் கண்ணோட்டத்தில் இருப்பதில்லை. அதாவது, அரசின் செலவினமும், வருவாயும் பாலினச் சமநிலையில் இருப்பதில்லை.

அரசு நிதிநிலையறிக்கைக உருவாக்கத்திலும் நிதியாதாரங்களை ஒதுக்குவதிலும் ‘பாலின ஆய்வை’ மேற்கொள்வது (அதற்கான கருவிகளும் நிகழ்முறையும் இதில் அடங்கும்) என்பதே பாலின வரவு செலவு அறிக்கை முன்முயற்சி என்பதாகும். நிதிக்கொள்கைகள் பெண்ணை மாறுபட்ட வகையில் பாதிக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுவதும் பொதுக் கொள்கைகளின் நிகழ்வுப்போக்கில் ஏற்படும் பாலினம் சார்ந்த வேறுபாடுகளை உள்ளிணைத்துக்கொள்வதற்கான பொறியமைவு ஒன்றை உருவாக்கிக்கொள்வதும் இதன் நோக்கம் ஆகும்.

பல்வேறு நாடுகளிலுள்ள பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கைகள், கீழ்காணும் கேள்விகளுக்கு விடையளிக்க முயல்கின்றன.

- பல்வேறு துறைகள் அல்லது செயல்பாடுகளுக்கு செய்யப்பட்டுள்ள நிதிஒதுக்கீடுகள் வெளிப்படுத்தும் விவரங்கள்படி அரசின் திட்ட முன்னுரிமைகள் என்ன?
- பாலின ரீதியான ஊனங்களைக்/பலவீனங்களைக் களைய எத்தகைய குறிப்பான வழிமுறைகளை அரசு கையாண்டுள்ளது? அதற்காக அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி எவ்வளவு?
- மேற்கூறிய வழிமுறைகளுக்காக, குறிப்பிட்ட ஒரு திட்டத்திற்காக ஒதுக்கப்படும் நிதி, அதே ஆண்டில் செலவழிக்கப்படுகிறதா?
- திட்ட அடிப்படையில் ஆண்-பெண் இருபாலாருக்கும் சமமாக சென்று சேரவேண்டிய அரசின் செலவினங்கள் எந்த அளவிற்கு ஆண்-பெண் இருவருக்கும் நியாயமானமுறையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது? அதேபோல், அதன் பலன்களும் ஆண்-பெண் இருவருக்கும் சமமாக கிடைக்கிறதா? உதாரணமாக, துவக்கக் கல்விக்கான அரசின் செலவில் சிறுமிகளுக்கும் சிறுவர்களுக்கும் யதார்த்தத்தில் கிடைத்த பங்கு என்ன?
- முக்கியம் என்று பெண்கள் கருதும் செயல்பாடுகளுக்கென்று எவ்வளவு நிதி உண்மையில் ஒதுக்கப்பட்டது, செலவிடப்பட்டது என ஆய்வு செய்ய சில நாடுகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த ஒதுக்கீடுகளில் இருந்து பண ரீதியாக என்ன விளைவுகள் ஏற்பட்டது என்று பார்க்காமல் ஸ்தூலமாக என்ன விளைவுகள் என்ற அடிப்படையில் நிதிநிலையறிக்கையின் செயல்பாட்டை ஆய்வு செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கை என்பது பொதுக் கொள்கைகளில் பாலின தாக்கங்களை உருவாக்கும். இந்த நோக்குநிலையில், தேசிய அளவில் பல்வேறு ஆவணங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மத்திய, மாநிலத் திட்டங்களில் ஆணுக்கும் பெண்ணுக்குமான செலவினங்கள் மற்றும் சலுகைகள் குறித்து மதிப்பீடு செய்வதே இதன் பொதுவான நோக்கமாகும்.

**பெண்களுக்கான தேவைகளின் அடிப்படையில், அரசின் செலவினங்களுக்கான ஒதுக்கீடு என்பதுதான் பாலினக் கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கைக்கான எளிமையான விளக்கம்.**

**பாலின சமத்துவ அடிப்படையிலான நிதிநிலையறிக்கை என்பது பெண்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு அல்லது பெண்களுக்கான தனியான நிதிநிலையறிக்கை என்பதை கோரவில்லை. மாறாக, நிதிநிலையறிக்கையின் திட்ட செலவினங்களை ஆணுக்கும், பெண்ணுக்கும் உரிய வகையில் பிரித்தளிப்பதே/பகிர்ந்தளிப்பதே அதன் அடிப்படை நோக்கமாகும்.**

# பாகம் II

## இந்தியாவில் பாலினக் கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கை

3. **இந்திய நிலவரம்**
4. **மாநிலங்களின் நிலவரம்** -
5. **பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம்**

## இந்தியாவில் பாலினக் கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கை

''சமத்துவத்தை நோக்கி'' என்ற தலைப்பிலான ஆய்வறிக்கையை, இந்திய பெண்களின் நிலைகுறித்த ஆய்வு குழு 1974-ம் ஆண்டு சமர்ப்பித்தது. அரசு செலவினங்களில் பாலினக் கண்ணோட்டத்தை உருவாக்குவதற்கான தூண்டுதலாக அந்த அறிக்கை அமைந்தது.

அதேபோல், பொதுவான மேம்பாட்டு மற்றும் வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து, பெண்களுக்கான குறிப்பான ஒதுக்கீட்டை உத்திரவாதம் செய்யவேண்டும் என்று 8-வது ஐந்தாண்டுத் திட்டம் (1992-97) வலியுறுத்தியது.

பல்வேறு துறைகளில் ஒதுக்கீடு செய்யப்படும் மேம்பாட்டு நிதி பெண்களுக்கு கிடைக்காமல் இருக்கக்கூடாது. மேலும், பெண்களுக்கான சிறப்புத் திட்டங்கள் பொதுவான மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உறுதுணையாக அமைய வேண்டும். மட்டுமின்றி, பெண்களுக்கானத் திட்டங்கள் அனைத்தும் பெருமளவில் பாலின கூர்மையுணர்வைப் (Gender Sensitivity) பிரதிபலிக்க வேண்டும்.

ஆனால், இன்றளவும் நிதி ஒதுக்கீடு மற்றும் அதன் பலன்கள் பெண்களுக்கு முழுமையாக சென்றடைவதில்லை. அதனை உத்திரவாதம் செய்வதில் பெருமளவு முன்னேற்றம் ஏற்படவில்லை.

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில்தான் (1997-2002) பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. மத்திய, மாநில நிதிநிலையறிக்கையில், பெண்களுக்கு தொடர்புடைய அனைத்து துறைகளின் நிதி ஒதுக்கீடு மற்றும் பலன்களில் 30 சதவீதம் பெண்களுக்கு அளிக்கப்படுவது உத்திரவாதம் செய்யப்படுவதை உறுதி செய்யும் பிரதான செயல்தந்திரங்களில் இத்திட்டமும் ஒன்றாகும். மேற்கூறிய திட்டம் மற்றும் செயல் தந்திர வழிமுறைகள் மூலம் பெண்களுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் பலன்களை விளைவுகளை உறுதிசெய்யும் கட்டமைப்பு மூலம் பெண்களை அதிகாரமுள்ளவர்கள் ஆக்குவதகாக முன்மொழியப்பட்டுள்ளள செயல்தந்திரம் அனைத்தையும் உள்ளடக்கிய அணுகுமுறையைக் கொண்டுள்ளதா என்பது எச்சரிக்கையுடன் கண்காணிக்க வேண்டும் என்றும் அது அறிவுறுத்தியது.

கடந்த 1998-ல் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை நாட்டிலுள்ள விவரங்களை பாலின கண்ணோட்டத்தில் தொகுத்தது. மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் பல்வேறு கலந்துரையாடல்கள் நடத்திய பின்னர், பாலின வளர்ச்சிக் குறியீடுகள் (Gender Development Index - GDI) மற்றும் பாலின அதிகார/ஆளுமையை அடைவதற்கான வழிமுறைகள் (Gender Empowerment Measures - GEM) ஆகியவற்றிற்கான 18 காரணிகள் அடையாளம் காணப்பட்டு, அதனடிப்படையில் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டன. (பக்கம் 16-ஐ பார்க்கவும்)

**பாலின வளர்ச்சிக் குறியீடுகள் (Gender Development Index - GDI) மற்றும் பாலின அதிகார/ஆளுமையை அடைவதற்கான வழிமுறைகள் (Gender Empowerment Measures - GEM) ஆகியவற்றிற்கான 18 காரணிகள்:**

1. ஆண்-பெண் பால்நிலை விகிதம்
2. ஆண்-பெண் பால்நிலை விகிதம் (0-6 வயது)
3. ஆண்-பெண் இறப்பு விகிதம் (15-35 வயது)
4. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம்
5. Proxy Indicator for control over Resources
6. அமைப்பாக்கப்பட்ட துறையிலுள்ள அமைப்பாக்கப்படாத தொழிலாளர்களில் ஆண்-பெண் சதவீதம்
7. Percentage of agricultural labourers among marginal/ subsidiary workers
8. ஆணுக்கும் பெண்ணுக்குமான ஒருநாள் விவசாயக்கூலி
9. மத்திய, மாநில மற்றும் பஞ்சாயத்துகளில் வேலைவாய்ப்பு
10. நடுநிலைப்பள்ளி வரையிலான கல்வித்தகுதி
11. பள்ளி வருகை (6-14 வயது வரை)
12. Main and marginal WPR
13. ஆண்-பெண் கல்வி விகிதம்
14. ஒரு லட்சத்திற்குட்பட்ட மக்கள் தொகையில் இயற்கை மரணமல்லாத இறப்பு எண்ணிக்கை
15. கொலைக்கு இட்டுச் செல்லாத, பெண்கள் மீதான இதர வன்முறைகள்
16. குடும்பக்கட்டுப்பாடு செய்த ஆண்-பெண் சதவிகிதம்
17. மத்திய மாநிலத் தேர்தல்களில், வாக்களித்த, போட்டியிட்ட மற்றும் வெற்றிபெற்ற பெண்களின் எண்ணிக்கை
18. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவ-மாணவிகளின் சதவிகிதம்

“தெற்காசிய பிராந்தியங்களின் தேசிய நிதிநிலையறிக்கையை பாலின கண்ணோட்டத்தில் உருவாக்குது“ என்ற பெண்கள் பயிலரங்கத்தை ஐ.நா. வளர்ச்சி நிதியம் கடந்த ஜூலை 2008-ல் நடத்தியது. இதில், திட்டக்குழு, ஐ.நா-வின் துணையமைப்புகள், ஊடகங்கள், ஆய்வு நிறுவனங்கள் மற்றும் குடிமக்கள் கலந்து கொண்டனர். இந்தியாவில், பாலினக் கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கை உருவாவதற்கான அடித்தளமாக இந்தப் பயிலரங்கம் அமைந்தது.

தேசிய பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனத்தின் இரண்டாவது அறிக்கை 2001 ஆண்டு ஆகஸ்ட் மாதம் தாக்கல் செய்யப்பட்டது. அதில், 2001-02-ம் ஆண்டின் தேசிய நிதிநிலையின் பின்ஆய்வு வெளியிடப்பட்டது. அரசின் செலவினங்களை மூன்று வகையாக அந்த அறிக்கை பிரித்துள்ளது:

1. பெண்கள் மற்றும் சிறுமிகளை மட்டும் இலக்காகக் கொண்ட செலவினங்கள்

2. பெண்களுக்கு சாதகமான ஒதுக்கீடுகள் (பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்திலுள்ள சலுகைகளில் இணைந்த) அளவு/விகிதம்

3. பாலினத் தாக்கத்தை ஏற்படுத்தும் மத்திய பொது செலவினங்கள்

2004-2005ல் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சரகம் பாலின சமத்துவத்திற்காக நிதிநிலையறிக்கை இயற்றுதல் என்று குறிக்கோள் பிரகடனம் வெளியிட்டது. குறிக்கோளை அடைவதற்கான செயல்தந்திர கட்டமைப்பு நடவடிக்கைகளும் வடிவமைக்கப்பட்டு அது அனைத்து அமைச்சரகங்களுக்கும் தெரிவிக்கப்படுவதும் நடந்தது. (பார்க்க பக்கம்18 மற்றம்19)

# இலக்கு

## “பாலின சமநிலைக்கான நிதி திட்டமிடல்“

### செயல்பாட்டிற்கான பொது வரையறை

- **மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையறிக்கையில் பெண்களுக்கான செலவினங்களின் ஒதுக்கீட்டை அளவிடுதல்**
  - செயல்பாடு மற்றும் மேம்பாட்டிற்கான கருவிகளை நெறிமுறைபடுத்துதல்
  - போக்குகள் பற்றிய ஆய்வு
  - துறைவாரியாக ஒதுக்கீடு செய்வதில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் ஒதுக்கீடு செய்யும் அளவீடுகளின் முக்கியத்துவத்தில் ஏற்படும் மாற்றம்
  - ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கும், உண்மையில் செலவிடப்பட்ட நிதிச் செலவினங்களுக்கும் இடையிலான வேறுபாடு
  - இலக்குகளை அடைதல்
- **அரசு கொள்கைகளில் பாலின தணிக்கை – மத்திய மாநில அரசுகளின் பணம், நிதி மற்றும் வர்த்தக கொள்கைகளில் தணிக்கை**
  - கடன் கொள்கை, வரி உள்ளிட்ட பரந்துபட்ட கொள்கைத் திட்டங்களை வழி நடத்துவதற்கு உதவியான ஆய்வுகள் மற்றும் நுண்ணிய படிப்புகள்
  - பாலின சமநிலையை கொண்டு வருவதை அடையாளம் காணும் வகையில் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகளில் ஏற்படுத்தப்படும் பாலினத் தாக்கம்
  - பாலின சமத்துவமின்மையைத் திருத்தும் வகையில் பெண்களுக்குச் சாதகமான நடவடிக்கைகளை அடையாளம் காண்பதற்கான நுண்ணிய ஆய்வுகள்
- **மத்திய, மாநில அரசுகனிள் நிதிநிலையறிக்கையிலுள்ள பல்வேறு திட்டங்களின் தாக்கம் குறித்த மதிப்பீடு**
  - பயன்கள் குறித்த அவ்வப்போதைய நுண்ணிய ஆய்வுகள்

  சேவைகளை அளிப்பதற்கான செலவினம் பற்றிய ஆய்வு

கல்வயிறிவு, பிரசவத்தின் போதான இறப்பு, உழைப்பாளர் எண்ணிக்கையில் பங்கேற்பு போன்ற முக்கியமான பொருளாதார குறியீடுகளில் தென்படும் விவரங்களின் அடிப்படையில் பெண்களின் நிலையின் மீது திட்டத்தின் தாக்கம் பற்றி ஆய்வு செய்வது,

- பாலின தகவல்களை சேகரித்தல் மற்றும் நிறுவனமயப்படுத்துதல்
  - செயல்படுத்தும் முகமைகளிலிருந்து (agencies) பெறும் விவரங்களுக்கு தகவல் தொகுப்பு நிர்வாக முறையை (MIS) உருவாக்குதல்
  - தேசிய மற்றும் மத்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் இதர புள்ளிவிவர சேகரிப்பில் புதிய காரணிகளை சேர்த்தல்
- கலந்தாலோசித்தல் மற்றும் பயிற்சி
  - நடைமுறையிலுள்ள சிறந்த செயல்பாடுகள் ஆவணப்படுத்துதல் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
  - தகவல்களை பிறருக்கு சென்று சேர்ப்பதற்கான வழிமுறைகள் மற்றும் கருவிகளை உருவாக்குதல்
  - வல்லுநர்கள் மற்றும் பயனாளிகளுக்கான கூட்டு மற்றும் செயல்பாட்டு அமைப்புகள்
- பாலின சமத்துவத்தை பங்கேற்பில் நிறுவும் வகையில் முடிவுகளை பரிசீலித்தல் - முடிவெடுக்கும் செயல்பாட்டில் பெண்களை அதிகமாக ஈடுபடுத்துதல், அதன்மூலம் பாலின சமத்துவத்தை நோக்கிய திட்ட மாதிரிகளில் அதிகமாக பெண்களை ஈடுபடச் செய்தல்.
- பராமரிப்பு பணிகள், கூலியில்லாத வீட்டு வேலைகள் உள்ளிட்ட பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக உள்ள பெண்களின் பங்களிப்பை சரியாக படம் பிடித்துக் காட்டக்கூடிய கணக்குகளை உருவாக்குதல் மற்றும் பிரதிபலித்தல்

இந்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் ‘பாலின சமநிலைக்கான திட்டநிதி‘ ஆண்டறிக்கை 2004-05-லிருந்து தொகுக்கப்பட்டது.

சமூகத்தில் சரிபாதி பெண்கள் என்பதை பெரும்பான்மை நேரங்களில் கொள்கைகளை உருவாக்குபவர்கள் மறந்து விடுகிறார்கள் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அரசின் அனைத்து திட்டம், சலுகைகளில் அவர்களுக்கு சரி பங்கு உள்ளது என்பதையும் அவர்களும் அதில் சரி பாதியை கேட்டுப்பெறும் உரிமை உடையவர்கள் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

*2008-09-ம் ஆண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலையறிக்கையை சமர்பித்து நாடளுமன்றத்தில் நிதி அமைச்சர் ப. சிதம்பரம் ஆற்றிய உரையிலிருந்து...*

2008-09 நிதிநிலையறிக்கையில் பெண்கள் எங்கு இருக்கின்றனர்?

பெண்களுக்கான மொத்த ஒதுக்கீடு மிகக் குறைவான அளவே அதிகரித்துள்ளது. (பாலின நிதிநிலையறிக்கையின்படி) அரசின் மொத்த செலவினத்தில் 3.3%-திலிருந்து 3.6%-மாக, 0.3% மட்டுமே அதிகரித்துள்ளது. பல்வேறு துறைகள் வெளியிட்ட பாலின திட்ட செலவினங்கள் (33 மானியக் கோரிக்கைகள்) மாறவேயில்லை என்பதும் பெரிதும் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது.

- விவசாயத்தில் பெண்களுக்கான ஒதுக்கீடு (2007-08 திருத்த மதிப்பீடு) 2,52%-லிருந்து 3.66%-மாக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு விவசாயத்தின் மொத்த ஒதுக்கீட்டில் கணக்கெடுக்கப்பட்ட சதவீதமாகும்.
- பெண்களுக்கான உயர்கல்விக்கான ஒதுக்கீட்டில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 19,22%-த்திலிருந்து (2007-08 திருத்தப்பட்ட ஒதுக்கீடு) 17.13%-மாக (2008-09 நிதிநிலையறிக்கையின் ஒதுக்கீடு) குறைக்கப்பட்டுள்ளது.
- மூன்றில் ஒரு பங்கு பெண்கள் அமைப்புசாராத் தொழிலாளர்கள். இதனைக் கணக்கில்கொண்டால், அவர்களின் சமூக பாதுகாப்பு உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சனைகள் 2008-09 நிதிநிலையறிக்கையில் கண்டுகொள்ளப்படவேயில்லை என்பது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது.

*-Response to Union Budget 2008-09,*
*Centre for Budget and Governance Accountability.*

2006-ம் ஆண்டில், இந்திய அரசின் 11-வது ஐந்தாண்டு திட்டத்தில் வைக்கப்பட்ட அணுகுமுறைத் தாள் அறிவித்தது:

பாலின ஆட்சியதிகாரம், மேம்பாடு மற்றும் சமத்துவம் ஆகியவற்றை அடைவதற்கான வழிமுறைகளை கையாள்வதுதான் 11-வது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய அம்சமாகும். துறைகள் மற்றும் அமைச்சரகத்தைத் தாண்டிய சலுகைகளை, கொள்கைத் திட்டங்களில் கொண்டிருப்பதன் மூலம்தான் சமத்துவத்தை அடைய முடியும். பயனாளிகளில் 33% நேரடியாகவோ, மறைமுகமாகவோ பயனடைபவர்கள் பெண்கள் மற்றும் சிறுமிகளாக இக் வேண்டும் என்பதை 11-வது ஐந்தாண்டு திட்டம் இலக்காகக் கொண்டிருந்தது.

11வது திட்டக் காலத்தில் அனைத்து துறைகள்/அமைச்சரகங்களிலும் பாலின நிதிநிலை அறிக்கை செல்கள் விரிவாக்கம் செய்யப்படும் என்றும் நிதிநிலையறிக்கையின் விளைவுகளை மதிப்பீடு செய்வதற்கான ஒருங்கிணைந்த கண்காணிப்பு மற்றும் தணிக்கை பொறியமைவை மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஒவ்வொரு துறை மற்றும் அமைச்சரகத்தில் ஏற்படுத்தப்படும் என்றும் 11வது திட்டத்திற்கான பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது மற்றும் குழந்தைகள் வளர்ச்சிக்கான வழிநடத்தும் குழு (The Steering Committee on Empowerment of Women and Development of Children) வலியுறுத்தியது. 11வது திட்டக் காலத்தில் பெண்கள் குழந்தைகள் வளர்ச்சித் துறைக்குள் பாலின நிதிநிலையறிக்கை குழு ஒன்று உருவாக்கப்படுவது பற்றியும் அது பேசியது. 'இறுதி ஆய்வில் பார்க்கும்போது, கள மட்டத்தில் அவைதான் அனைத்து வளர்ச்சி நடவடிக்கைகளையும்அமுல்படுத்தும் முகமைகளாக இருக்கின்றன என்பதால்', அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பாலின நிதிநிலையறிக்கை அமுலாக்கப்படுவது தேவை என்றும் அந்தக் கமிட்டி வலியுறுத்தியது.

## பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கையை மாநிலங்களுக்கு கொண்டு சேர்த்தல்

**பெண்கள் முக்கியப் பங்கு வகிக்கும் அனைத்து பொது செலவினங்களிலும் பெண்களுக்கான குறிப்பான ஒதுக்கீட்டிலும் பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை வலியுறுத்திவருகிறது. மாநிலத்திற்கான மத்திய அரசு அளிக்கும் முக்கியத் திட்டங்களில் பாலின விழிப்புணர்வுடன் செயல்படுவது மற்றும் மாநில நிதிநிலையறிக்கையிலும் இந்தக் கண்ணோட்த்தை வலியுறுத்துவது என்பதில்தான் பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கையின் வெற்றி அடங்கியுள்ளது.**

**தங்களது திட்டங்கள் அனைத்தையும் பாலினக் கண்ணோட்டத்தில் உருவாக்க வேண்டும் என மத்தியத் திட்டக் கமிஷனும் அனைத்து மாநிலங்களையும் வலியுறுத்தியுள்ளது. இதற்கான வழிகாட்டுதலை கடந்த 11-வது திட்டக் கமிஷன், அனைத்து மாநிலங்களுக்கும் வழங்கியுள்ளது.**

***- "Gender Budgeting - Budgeting for Gender Equity"***

***Annual Report 2006-07, Ministry of Women and Child Development, GoI.***

## பாலினக் கண்ணோட்டத்தில் திநிலையறிக்கை - மாநிலங்களின் நிலவரம்

பாலின நோக்குநிலையில் மாநில நிதிநியையறிக்கையை ஆய்வு செய்யவேண்டியதன் அவசியத்தை பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய அறிக்கைகள் பல சுட்டிக்காட்டியுள்ளன. ஏனெனில், சமூக நலத்துறையின் செலவினங்களுக்கு மாநில, யூனியன் பிரதேச அரசுகள்தான் பொறுப்பாகின்றன. மட்டுமின்றி, அத்துறையின் செலவினங்கள்தான் நலத்திட்டம் மற்றும் பெண்களின் அதிகாரத்தை பெறுவது ஆகியவற்றின் மீது தாக்கம் செலுத்துகின்றன.

கடந்த டிசம்பர் 2001-ல், 22 மாநிலங்களில் பாலின கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கை உள்ளதா என்பதை ஆய்வு செய்யும் பணியை மக்கள் கூட்டுறவு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்திடம் (National Institute of Public Cooperation and Child Development - NIPCCD) மத்திய பெண்கன் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை ஒப்படைத்தது.

இந்த அமைப்பு மிகவும் எளிதான முறையில் தங்களது ஆய்வை மேற்கொள்டது. மாநில நிதிநிலையறிக்கையின் ஆவணங்களிலிருந்து தவல்களை சேகரிப்பது எனும் முறையை பின்பற்றியது. கீழ்காணும் திட்டங்களிலிருந்து தகவல்களை சேகரித்தது:

- பெண்களை இலக்காகக் கொண்ட திட்டங்கள் (100% ஒதுக்கீடும் பெண்களை மட்டும் சேரும் திட்டங்கள்)
- பெண்களுக்கு ஆதரவான திட்டங்கள் (ஒதுக்கீட்டில் குறைந்தது 30%-ம் பெண்களைச் சென்று சேரும் அல்லது பெரும்பாலும் பெண்கள் பயனடையும் திட்டங்கள்)
- பாலின நடுநிலைத் திட்டங்கள் (சமூகம் முழுமைக்குமானத் திட்டங்கள்)

இச்சமூத்தில் பெண்களின் நிலையைக் கணக்கில் கொண்டு இத்திட்டங்களை இன்னும் 4 உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

- பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு பணிகள்
- பொதுநலப் பணிகள்
- பொருளாதாரப் பணிகள்
- முறைப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு பணிகள்

மாநிலங்களிலுள்ள கீழ்காணும் 6 துறைகள் ஆய்வுக்காக தேர்வு செய்யப்பட்டவை:

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை
- நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை
- சமூகநலத்துறை
- ஊரக வளர்ச்சித்துறை
- கல்வித்துறை
- வேளாண்துறை

**மக்கள் கூட்டுறவு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்திடம் (National Institute of Public Cooperation and Child Development - NIPCCD) மற்றும் மத்திய பெண்கன் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையின் முயற்சியால் இந்திய அரசு பாலினக் கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கையை மிகவும் தொடக்கநிலையில் உருவாக்கியுள்ளது. அதன் அடிப்படையில் சில மாநிலங்களில் நிதிநிலையறிக்கையின் முக்கிய அம்சங்கள்:**

- "ஏற்கனவே, உள்ளாட்சித்துறைத் திட்டங்களில், வளங்களில் 10% நிதிஒதுக்கீடு பெண்கள் மேம்பாட்டுத் துறைக்கென எங்கள் மாநிலத்தில் செலவிடப்படுகிறது" என, கடந்த 2001-ல் கேரள முதல்வர் கூறியுள்ளார்.
- 6 துறைகளில் பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலை தணிக்கையை செய்வதற்கு ராஜஸ்தான் அரசு, கடந்த 2005-06 அன்று அழுத்தம் அளித்துள்ளது.
- "பாலின கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கை உள்ளதா என்பதை கண்காணிக்கும் குழுவை அமைப்பது மற்றும் பெண்களுக்கான ஒதுக்கீடு போதுமானதாக உள்ளதா என்பதை நிதித்துறை ஆய்ந்தறிந்து அதனை மேம்படுத்த சில வழிமுறைகளை அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்" என்று கர்நாடக மாநில துணை முதல்வர், கடந்த 2006-ம் ஆண்டு கூறினார்.
- மத்திய பிரதேசத்தில், 13 துறைகளில் திட்ட செலவினங்கள் பாலின கண்ணோட்டத்தை உள்ளடக்கியுள்ளது.
- அசாமில், வரும் நிதியாண்டில் பாலின கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கையை சமர்பிக்க இருப்பதாக, அம்மாநில முதல்வர் 2008-09-ம் ஆண்டு நிதிநிலையறிக்கையை தாக்கல் செய்யும்போது தெரிவித்தார்.
- பெண்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டை வலியுறுத்தும், பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கை 2008-09-ம் ஆண்டு பீகாரில் தாக்கல் செய்யப்பட்டது.
- 2008-09-ம் ஆண்டுதான் முதல் முறையாக பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கை ஹரியானாவில் தாக்கல் செய்யப்படுவதாக, அம்மாநில முதல்வர் கூறினார்.

10 மாநிலங்களின் (அசாம், குஜராத், மேகாலயா, ஜம்மு-காஷ்மீர், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், ஒரிசா மற்றும் மணிப்பூர்) 2000-01 மற்றும் 2001-02 ஆண்டின் நிதிநிலையறிக்கையின்ன ஆய்வு விவரங்கள் இடைக்கால அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

அந்த அறிக்கையில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதாக அதை எழுதியவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இருப்பினும், அதன் விவரம்:

> “மேற்கூறிய 10 மாநிலங்களில் பெண்களை இலக்காகக் கொண்ட மற்றும் பெண்களுக்கு ஆதரவான மாநில திட்ட ஒதுக்கீடுகள் 3%-த்திலிருந்து 13% வரை உள்ளது. இந்த திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. 4 மாநிலங்களில் 1%-க்கும் குறைவாக உள்ளது. பெண்களுக்கான ஆதரவு திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியின் அளவில் பாரதூரமான வேறுபாடுகள் உள்ளன. அத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு 1%-லிருந்து 11% வரை உள்ளது. பெண்களின் திட்டங்களுக்கான நிதிஒதுக்கீடு என்பது ஒதுக்கீடு செய்ய வேண்டும் என நினைக்கும் அளவைக் காட்டிலும், திட்டக்குழுவின் பரிந்துரையைக் காட்டிலும் (30%) மிகவும் குறைவு".
>
> - *NIPCCD Study, 2002.*

பாலின கண்ணோட்டத்திலான மாநில நிதிநிலையறிக்கை ஆய்வு செய்வதற்கான முயற்சிகளில் சிக்கல்கள் நீடிக்கின்றன. இந்த ஆய்வுகளை செயல்வடிவமெடுப்பது மற்றும் புதிய படிப்பினைகளை எடுத்துக் கொள்வதில் NIPCCD புதிய முயற்சிகளை எடுத்துள்ளது. நிதி ஒதுக்கீட்டில் மாற்று வழிமுறைகளைக் வெளிபடுத்தவும், நிதிநிலையறிக்கையிலுள்ள பாலினக் கண்ணோட்ட இடைவெளிகளை வெளிக்கொண்டு வரவும் இந்த முயற்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

## சிறப்புக்கூறுத்திட்டம் - முக்கியக் கூறுகள்

1. **விகிதாச்சாரம் (PROPORTIONALITY) :** சிறப்புக் கூறுத்திட்டத்தின்படி மத்திய, மாநில அரசுகளின் ஆண்டுத் திட்டத்தில், ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு அளிக்கப்படும் நிதி ஒதுக்கீடு, மொத்த மக்கள்தொகையில் அந்தப் பிரிவினரின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் வேண்டும். அதாவது, மொத்த மக்கள் தொகையில் பெண்கள் 50% உள்ளனர் என்பதால், மொத்த நிதிஒதுக்கீட்டில் 50% பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

2. **குவித்தல் (CONVERGENCE) :** பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகள், பெண்களுக்கு அளிக்கும் சலுகைகள் மற்றும் திட்டங்களில் எவ்வித சாதகமான மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. குறிப்பிட்ட பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்பவும், வரலாற்று ரீதியான அவர்களின் தேவைகளின் அடிப்படையிலான முழுநிறைவானத் திட்டங்கள் மற்றும் அதற்குரிய நிதிஒதுக்கீடு இருத்தல் அவசியம். அதேபோல், இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி, மாவட்ட-மாநில மற்றும் துறைவாரியாக பிரித்துக் காட்டப்பட வேண்டும்.

3. **சர்வ பொருத்தப்பாடு (UNIVERSAL APPLICATION):** சிறப்புக்கூறுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எந்தவொரு மத்திய, மாநில அரசுகளின் அமைச்சகங்களுக்கும் விலக்கு அளிக்க முடியாது. அதேபோல், போலியான நிதிஒதுக்கீடு மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத திட்டத்திற்கான ஒதுக்கீடு ஆகியவற்றை அனுமதிக்க முடியாது என்றும் சிறப்புக்கூறுத்திட்டம் தெள்ளத்தெளிவாக குறிப்பிட்டுள்ளது. ஒவ்வொரு துறை மற்றும் அமைச்சகம் இந்தத் திட்டத்தை சீரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அரசாணையும் உள்ளது. அதேபோல், நிதிநிலையறிக்கையின், திட்ட செலவுகளுக்கான இணைப்பு நூலில், இத்திட்டத்திற்கான செலவினங்கள் காட்டப்படவேண்டும். இதன்மூலம், இத்திட்டத்தின் நிதி குறைவாக செலவிடப்படுவதையும் தவறுதலாகப் பயன்படுத்தப்படுவதையும் தடுக்க முடியும்.

4. **சுயமாக முடிவெடுத்தல் (AUTO-DECISION MAKING) :** பெண்களுக்கான சிறப்புக்கூறுத்திட்டத்தினைப் பொறுத்தவரை இறுதி முடிவெடுப்பது பெண்களாகவே இருக்க வேண்டும் என்று சிறப்புக் கூறுத்திட்டம் அனுமானிக்கிறது.எனவே, மத்திய மற்றும் மாநில மட்டத்தில் இருக்கும் பெண்கள் மற்றம் குழந்தைகள் நலத்துறை போன்ற பெண்கள் நல்வாழ்வு தொடர்பான துறைகள் சிறப்புக் கூறு திட்டத்தின் கருத்துருவாக்கம், அமுலாக்கம் மற்றும் கண்காணிப்புக்கான ஒருங்கிணைப்புமுகமையாகவும் செயல்பட வேண்டும்.

## பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் - அணுகுமுறை மாற்றங்கள்

கடந்த 6-வது ஐந்தாண்டு திட்டத்தின் போது உருவான சிறப்புக்கூறுத் திட்டம் மற்றும் அதன்பின்னர் உருவான பழங்குடியினருக்கான துணைத் திட்டம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் உருவாக்கப்பட்டது. தலித் மக்களுக்கான உருவாக்கப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களின் தோல்வியிலிருந்து பெற்ற படிப்பினைகளின் விளைவாகத்தான் தலித்துகளுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் உருவானது. தலித் மக்களுக்கான திட்டங்கள் மற்றும் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மிகப்பெரும் மாற்றத்தை சிறப்புக்கூறுத் திட்டம் உருவாக்கியுள்ளது. மிகத் தெளிவான நோக்கம் மற்றும் செயல்முறைகளை சிறப்புக்கூறுத் திட்டம் உள்ளடக்கியுள்ளது(எதிர் பக்கத்திலுள்ள பெட்டிச் செய்தியைப் பார்க்கவும்).

தலித்துகளுக்கான நிதிநிலையறிக்கையைப் பொறுத்தவரை, சமூக கண்காணிப்பகம் மற்றும் நிதிநிலையறிக்கையில் இதேபோன்று மாற்றங்களைக் கொண்டுவர நினைக்கும் நிறுவனங்கள் ஒரு நீண்ட, நெடிய அனுபவத்தைப் பெற்றுள்ளன. சிறப்புக்கூறுத் திட்டத்தின் மூலம், தலித் மக்களுக்கான பயன்பாடுகள் என்ன என்பது குறித்தும், ஆட்சியாளர்கள் அதனை செயலிழக்கச் செய்யும் முயற்சிகள் குறித்தும், அதனால் தலித் மக்களுக்கான இழப்புகள் குறித்தும் அந்த அனுபவங்கள் பறைசாற்றுகின்றன.

**தலித் மக்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்தை செயல்படுத்த முடியாமல் இருக்கும் நிலைபோல் ஒரு ஊனப்பட்ட நிலையை பெண்களுக்கான சிறப்புக்கூறுத்திட்டம் சந்திக்கக் கூடாது என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.**

9-வது ஐந்தாண்டு திட்டத்தில்தான் (1997-2002) பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கை மற்றும் பெண்களின் ஆட்சியதிகாரதிற்கான வழிமுறைகளை இத்திட்டம் உருவகப்படுத்தியுள்ளது. பெண்களுக்கான மற்றும் பெண்களுக்குத் தொடர்புடைய துறைகளின் பணிகளை ஒருகிணைக்கும் நோக்கில் பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் செயல்படுகிறது.

மத்திய, மாநில அரசுகள் பெண்களுக்குத் தொடர்புடைய அனைத்து துறைகளிலும் நிதி மற்றும் சலுகைகளில் 30% பெண்களுக்கென ஒதுக்கீடு செய்ய வேண்டும் என இத்திட்டம் வலியுறுத்துகிறது. பெண்களை அதிகாரப்படுத்துவதில் ஓர் முழுமையான அணுகுமுறையைக் கொண்டுவரக்கூடியதாக முன்மொழியப்படும் செயல்தந்திரம் இருப்பதை உறுதி செய்யும் பொறியமைவு ஒன்றின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி/ பலன்கள் சென்றடைவது குறித்த சிறப்பு எச்சரிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அது அறிவுறுத்துகிறது.

| தலித்துகளுக்கான சிறப்புக் கூறுத் திட்டம் | பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் |
|---|---|
| 1. **விகிதாச்சாரம்** : மொத்த திட்ட ஒதுக்கீட்டில் தலித் மக்களுக்கு ஒதுக்கப்டும் நிதி, குறைந்தது, மொத்த மக்கள்தொகையில் அவர்களின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் வேண்டும். தமிழக மக்கள்தொகையில் தலித் மக்களின் எண்ணிக்கை 19%. எனவே, மொத்த திட்டநிதியில் ஐந்தில் ஒரு பங்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். | குறைந்தபட்சம் 30% நிதி யும் பயன்களும் பெண்கள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும். திட்டநிதியைப் பொறுத்து, பெரும்பாலன இடங்களில் 50% நிதி ஒதுக்கப்பட வேண்டும். |
| 2. **குவித்தல்** : குறிப்பிட்ட அரசாணையின்படி, தலித் மக்களின் மேம்பாட்டை உத்திரவாதப்படுத்தும் திட்டங்களும் நிதிஒதுக்கீடும் சிறப்புக்கூறுத் திட்டத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நிதிநிலையறிக்கையின், திட்ட செலவுகளுக்கான இணைப்பு நூலில், இத்திட்டத்திற்கான செலவினங்கள் காட்டப்படவேண்டும். இதன்மூலம், இத்திட்டத்தின் நிதி குறைவாக செலவிடப்படுவதையும் தவறுதலாகப் பயன்படுத்தப்படுவதையும் தடுக்க முடியும். | பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்தை பொறுத்தவைரை,ஒரு சிலத் திட்டங்களில், ஒருங்கிணைப்பில் உள்ள செயல்பாடுகள் தவிர்த்து, குறிப்பான முன்னேற்றம் மற்றும் தெளிவான பார்வை இல்லை. |
| 3. **சர்வ பொருத்தப்பாடு** : சிறப்புக்கூறுத் திட்டத்தின் கீழ் மாநில அரசின் ஒவ்வொரு துறையும் அமைச்சகமும், தலித்துகளின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் அடிப்படையில் பல்வேறுத் திட்டங்களைச் செயல்படுத்த குறிப்பான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல், போலியான நிதிஒதுக்கீடு மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத திட்டத்திற்கான ஒதுக்கீடுமூ ஆகியவற்றைத் தடுக்க வேண்டும். | காலம்காலமாக, பெண்கள் தொடர்பான துறைகளுக்கு மட்டுமே, பெண்களுக்கானச் சிறப்புக்கூறுத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. |
| சிறப்புக்கூறுத் திட்டத்தை அமுலாக்கி, கண்காணிக்கும் முகவர்களாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைதான் இந்த முகமை வேலையைச் செய்கிறது. | பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கையை திட்டமிடுவததில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை முக்கியப் பங்காற்றினாலும், அதனை கண்காணிக்கும் முகவராக செயல்படுவதில்லை. தமிழ்நாட்டில் அதற்கான துறை எதுவும் இல்லை. |

**WCPயை நெருக்கமாகச் சென்று ஆய்வு செய்து பார்க்கும்போது, அது உதித்தபோது அதற்கிருந்த வாய்ப்புகள் நீர்த்துப்போகச் செய்யப்பட்டிருப்பதையும் அதனை உருவகப்படுத்தியதிலேயே மிகப்பெரும் குறைபாடுகள் இருப்பதையும் காணமுடிகிறது, தலித்துகளுக்கான சிறப்புக் கூறு திட்டத்தையும் WCPயையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது WCPயில் சிறப்புக் கூறுத் திட்டம் என்பதற்கான அடிப்படையே நீர்த்துப்போகச் செய்யப்பட்டிருப்பதைப் பார்க்க முடியும். (எதிர் பக்கத்தில் உள்ள பெட்டிச் செய்தியைப் பார்க்கவும்)**

**தலித்துகளுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்தின் விகிதாச்சாரம், அணுகுமுறை, அனைத்துக்குமான பயன்பாடு மற்றும் தனித்துமாக முடிவெடுத்தல் ஆகிய அடிப்படைக் கொள்கைகள், பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்தில் மிகவும் நீர்த்துப்போன நிலையில் உள்ளன. இதனால், பாலினக் கண்ணோட்டத்துடனான நிதிநிலையறிக்கையின் விளைவாக பெண்களின் ஆட்சியதிகாரத்தை அடைதல் என்பது தடைபடுகிறது.**

**11-வது திட்டக் குழுவின் அணுகுமுறைத் தாள், இந்தப் பிரச்சனையை ஓரளவு பரிசீலித்துள்ளது (பக்கம் 21-யை பார்க்கவும்).**

**கீழ்காணும் இரண்டு கூற்றை பார்க்கும்போது, இந்தியாவில் பாலினக் கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கை உருவாக்க இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது என்பது தெளிவாகிறது.**

**''ஆய்வாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்களைக் கொண்டு பார்க்கும்போதும், பெறப்பட்ட தகவல்களில் உள்ள இடைவெளிகளைப் பார்க்கும்போதும் இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டிருந்த அனேகமாக அனைத்துத் துறைகளும், விதிவிலக்கான சில துறைகளைத் தவிர, <u>அந்தத் துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் பெண்கள் சிறப்புக் கூறு திட்டத்திற்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை சரியாக எவ்வளவு என்பதைக் குறிப்பிட முடியவில்லை.</u> கணக்கெழுதுதல்/ தணிக்கை, பதிவேடுகள் உருவாக்கம் போன்றவற்றில் ஒதுக்கீட்டைப் பிரித்தளிப்பது பற்றிய நடைமுறைகள் இல்லை. தேவையேற்படும்போதெல்லாம், தேவைக்கேற்றவாற புள்ளிவிவரங்களை அளிப்பதற்கான தற்காலிக நடைமுறை ஒன்ற மேற்கொள்ளப்படும் என்று தகவல் கிடைக்கிறது.''**

*- NIPCCD Study, 2002.*

''<u>பல்வேறு துறைகளைப் பொறுத்தவரை, நிதிநிலையறிக்கை 2007-08, பெண்களின் தற்போதைய நிலை மாறாதிருக்கும்படி பார்த்துக்கொள்கிறது.</u> பல வருடங்களுக்கு முன்பு, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட, அனைத்து அமைச்சரகங்களின் 30 சதம் நிதி ஒதுக்கீடு பெண்கள் சிறப்புக் கூறுத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளும்போது,மத்திய நிதிநிலையறிக்கைக் குறிப்பிடும் தொகை, அனைத்துத் திட்டங்களிலும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குவதைச் சாதிக்க இன்னும் நிறைய செயல்பட வேண்டியிருக்கிறது என்பதைக் காட்டுவதாக உள்ளது.''

*– Centre for Budget and Governance Accountability,*
*"Budget 2007-08: Dream or Despair? Response to Union Budget 2007-08."*

# பாகம் III

## தமிழகத்தில் பாலினக் கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கை

6. ஆய்வு முடிவுகள்

7. பரிந்துரைகள்

## தமிழகத்தில் பாலினக் கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கை - ஆய்வு முடிவுகள்

**ஒரு தலைமுறைக்கும் மேலாக பல்வேறு வழிகாட்டுதல்கள் மற்றும் தகவல்களை திட்டக்குழு மற்றும் மத்திய அரசு தெரிவித்து வருகிறது. இருப்பினும், இன்றளவும் *பாலினக் கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கையையோ, பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்தையோ* தமிழக அரசு எந்தவொரு ஆவணத்திலும், திட்டத்திலும் நடைமுறைப்படுத்தவில்லை.**

கடந்த அதிமுக ஆட்சிகாலத்தில் கொண்டுவரப்பட்ட 18 அம்ச திட்டக் கொள்கைகள், ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் கிடப்பில் போடப்பட்டு விட்டன. அதன்பிறகு, இன்றளவும் அதனை செயல்படுத்த எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. மேலும், மாநில அளவிலான பாலினக் கொள்கையும் எதுவும் இன்றளவும் இல்லை.

சமூக மேம்பாட்டுக்கான தமிழக மக்கள் இயக்கம், ஜனநாயக மாதர் சங்கம், பெண் பஞ்சாயத்துத் தலைவர்களின் கூட்டமைப்பு மற்றும் சமூக கண்காணிப்பகம் ஆகிய அமைப்புகள் அவ்வப்போது பாலினக் கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கையின் அவசியம் குறித்து தங்களது குரலை எழுப்பி வருகின்றன. இருப்பினும், இன்றளவும் தமிழக நிதிநிலையறிக்கை பாலினக் கண்ணோட்டத்தில் குருடாகவே உள்ளது. பாலின கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கை தாக்கல் செய்வதற்கான எந்தவொரு முயற்சியையும் தமிழக அரசு எடுக்கவில்லை.

தமிழகத்திலுள்ள குறிப்பான நிலைமைகளில், குறிப்பிட்ட பிரிவு பெண்களின் தேவைகளின் அடிப்படையில் பெண்களின் ஆட்சியதிகாரத்திற்கான ஒருங்கிணைந்த ஒரு கொள்கை அவசியம். பாலினக் கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கை அதற்கான முதல்படி என்றளவில் அதனை நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவை.

பாலினக் கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கை மற்றும் பாலினத்தை பிரதானப் படுத்துதல் குறித்த 3 பயிற்சிபட்டறைகளை ஐ.நா.மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை நடத்தியது. புதுதில்லி, பூனா மற்றும் கேரளாவில் நடத்தப்பட்ட இந்த பட்டறைகளில், மாநில அரசின் செயலாளர்கள், நிதித்துறை, திட்டக் கமிஷன், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் பிரதிநிதிகள், பங்கேற்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.

கடந்ம 2005-ம் ஆண்டு தென்னக மற்றும் மத்திய மாநிலங்களுக்கான பயிற்சிப்பட்டறையை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை பூனேயில் நடத்தியது. இதில் தமிழக அரசின் சார்பாக கலந்துகொண்ட பிரதிநிதிகள் பாலின கண்ணோட்டத்திலான நிதிநிலையறிக்கையை தாக்கல் செய்வதற்கான செயல்திட்டத்தை முன்வைத்தனர்.

| மாநிலம்: தமிழ்நாடு | | |
|---|---|---|
| | | |
| ● அர்ப்பணிப்புடன் பாலின சமத்துவத்தை கொள்கை அளவில் நடைமுறைப்படுத்துதல்.<br><br>● பலம் பொருந்திய சுயவுதவிக்குழுக்கள் மற்றும் பெண்களுக்கான துறைவாரியான நிதி ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கை. | ● செயல்வடிவத்துடனான நிதிநிலையறிக்கையை பலப்படுத்துதல் மற்றும் முடிவெடுக்கும் நிலைக்குப் பெண்களை உயர்த்துவதற்கான பயிற்சி அளித்தல்<br><br>● நடப்பிலுள்ள மனித மேம்பாட்டுக் குழுக்களில் பாலின கண்ணோட்டத்தைப் பிரதானப்படுத்துதல்<br><br>● நிதிநிலையறிக்கை பாலின விழிப்புணர்வுடன் இருக்கிறதா என்பதை பரிசீலித்தல் | ● பாலின செல் அமைப்பது குறித்து MWCD முலம் அமைச்சகத்திற்கு எழுதுதல் |

திட்டக்குழு மற்றும் மாநில அரசின் செயலாளர்கள் கலந்துகொண்ட பயிலரங்கத்தில் வெளிவந்த கருத்துக்கள்

**NIPCCD மற்றும் பெண்கள் சிறப்புக்கூறுத் திட்ட வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு துவக்க கட்ட ஆய்வுகளை சமூக கண்காணிப்பகம் நடத்தியது. இந்த வழிமுறைகளை இன்னமும் கூர்மைப்படுத்த வேண்டியுள்ளது. இருப்பினும், தமிழகப் பெண்களுக்கு எவ்வளவு பாதகமாக மாநில நிதிநிலையறிக்கை உள்ளது என்பதை இந்த ஆய்வின் முடிவு எடுத்துக் காட்டுகிறது.**

<u>பயன்படுத்தப்பட்ட ஆய்வு முறைகள்</u>

**குழந்தைகள் மேம்பாடு மற்றும் பொது ஒத்துழைப்பிற்கான தேசிய அமைப்பின் (என்.ஐ.பீ.சி.சி.டி)** ஆய்வு முறை :

'**என்.ஐ.பீ.சி.சி.டி**' ஆய்வு முறை என்பது ஓர் எளிய ஆய்வுப்பணி. அதாவது,

- **மகளிரை நோக்கிய சலுகைத் திட்டங்கள்** (100% ஒதுக்கீடும், பெண்களுக்குக் கிடைக்கும் சலுகைத் திட்டங்களாகும்).

- **மகளிர்சார்பான (மறைமுகப் பலன் தரக்கூடிய) சலுகைத் திட்டங்கள்** (ஒதுக்கப்பட்டதில் குறைந்தபட்சம் 30% பெண்களுக்கானது அல்லது பெண்களுக்குக் கணிசமாகப் பயன் தருவது).

- **பாலினம் என்றில்லாமல் பொதுவான சலுகைத் திட்டங்கள்** (முழுச் சமுதாயத்திற்கும் உரியது என்ற வகையில்).

ஆகிய சலுகைத் திட்டங்கள் மற்றும் நடைமுறைத் திட்டங்கள் அனைத்தையும் பற்றிய தேவையான விபரங்களை மாநில வரவு செலவுத் திட்ட ஆவணங்களிலிருந்து சேகரித்துப் பரிசீலிப்பது.

**பெண்கள் (சிறப்பு) கூறு திட்டம் :**

பெண்கள் (சிறப்பு) கூறு திட்டம், மத்திய, மாநில அரசுகளை '**மகளிர் சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளிலும் 30%க்குக் குறையாத நிதி அல்லது பயன்களைக் குறிப்பதில் உத்தரவாதம் செய்யும்படி பணிக்கிறது**'.

## தமிழ்நாட்டில் "பெண்கள் திட்டங்கள்" மீது மொத்தச் செலவினப் பார்வை

1997-98 முதல் 2004-05 முடிய (கணக்குகள்)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு (கணக்குகள்) | திட்ட ஒதுக்கீடு | பெண்களுக்கான சிறப்புக் கூறு திட்டத்தின்படி (பெண்களின் பங்கு 30%) | ஆண்டுத் திட்ட இணைப்பு புத்தகத்தில் உள்ள செலவினம் | % பங்கு (அணிவரிசை 2ல் அணிவரிசை 4ல் இணைத்த கணக்கு) | மறுக்கப்பட்ட தொகை (அணிவரிசை 3 - அணிவரிசை 4) (ஓர் ஒப்பீடு) |
| 1997 - 1998 | 4052.60 | 1215.78 | 127.37 | **3.14** | 1088.41 |
| **1998 - 1999** | 4500.09 | 1350.03 | 141.09 | **3.13** | 1208.94 |
| **1999 - 2000** | 5413.75 | 1624.12 | 145.18 | **2.68** | 1478.94 |
| **2000 - 2001** | 5807.26 | 1742.18 | 144.02 | **2.43** | 1598.16 |
| **2001 - 2002** | 5318.90 | 1595.68 | 155.84 | **2.93** | 1439.84 |
| **2002 - 2003** | 5841.05 | 1752.32 | 240.16 | **4.11** | 1512.16 |
| **2003 - 2004** | 7088.30 | 2126.49 | 242.34 | **3.42** | 1884.15 |
| **2004 - 2005** | 8285.84 | 2485.75 | 287.47 | **3.47** | 2198.28 |
| **(கடந்த 8 ஆண்டுகளில்), பெண்களுக்கு மறுக்கப்பட்ட மொத்த தொகை 1997-98இல் இருந்து 2004-05 வரையில் உள்ள குறிப்பிட்ட காலம்** | | | | | **12408.88** |

மூலம் : ஆண்டுத்திட்டம் : வரவு-செலவுத்திட்ட இணைப்பு நூல்கள், தமிழக அரசு (1999-2000இல் இருந்து 2006-07வரை)

குறிப்பு :

1. மகளிர் திட்டங்கள் = (பெண்களை இலக்காகக் கொண்ட திட்டங்களும்) + (பெண்களுக்கு ஆதரவான திட்டங்களும் ஆகும்.)
2. மாநில ஆண்டுத் திட்ட நிதி அளவுகள் மட்டுமே கணக்கில் எடுத்தாளப்படுகின்றன.

## 1997-98 முதல் 2004-05 முடிய கணக்குகள்:

NIPCCD மற்றும் பெண்கள் சிறப்புக்கூறுத் திட்ட வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட எங்களது ஆய்வு, கடந்த சில ஆண்டுகளில் தமிழகப் பெண்களுக்கு எவ்வளவு பாதகமான நிலையை மாநில நிதிநிலையறிக்கை ஏற்படுத்தியுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது. உண்மையில், பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அவர்களைச் சென்றடைவில்லை.

***1997-98 முதல் 2004-05 முடிய, மாநில திட்ட செலவினத்தில் பெண்களுக்கான நிதி ஒதுக்கீடு வெறும் 5% மட்டுமே. இது, பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் ஒதுக்கீடு செய்யும் குறைந்தபட்ச ஒதுக்கீடான 30%-த்தைவிட மிகவும் குறைவு.***

***1997-98 முதல் 2004-05 முடிய, குறைந்தபட்சம் 12,408.88 கோடி ஒதுக்கீடு பெண்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.***

1

### தமிழகத்தில் திட்ட ஒதுக்கீடும் பெண்களுக்கான கூறு திட்டமும் இணைந்த செயல்முறைகள் (துறைவாரியாக)

### 2005-06 (கணக்குகள்)

| 1<br>துறை | 2<br>திட்ட ஒதுக்கீடு | 3<br>பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டத்தின்படி (30%) பெண்களுக்கு உரித்தான பங்கு | 4<br>வரவு-செலவுத் திட்ட இணைப்பு புத்தகத்தின்படி பெண்களுக்கான செலவினம் | 5<br>மாநில மொத்த திட்ட ஒதுக்கீட்டில் கிடைத்த அளவின்படி பெண்களின் % (தூண் 4 / தூண் 2)*100 |
|---|---|---|---|---|
| 1. வேளாண்மையும் அது தொடர்பான பணிகளும் | 49261.47 | 14778.44 | 4.93 | 0.1 % |
| 2. ஊரக வளர்ச்சி | 153223.88 | 45967.16 | 0.00 | 0 |
| 3. பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு | 27955.49 | 8386.65 | 0.00 | 0 |
| 4. மின்சக்தி | 100972.88 | 30291.86 | 0.00 | 0 |
| 5. தொழிலும் கனிமப் பொருட்களும் | 47969.93 | 14390.98 | 0.00 | 0 |
| 6. போக்குவரத்தும் சாலைகளும் | 187163.68 | 56149.10 | 0.00 | 0 |
| 7. அறிவியல், தொழில்நுட்பம் சுற்றுச்சூழல் | 317.59 | 95.28 | 0.00 | 0 |
| 8. பொதுவான பொருளாதாரப் பணிகள் | 12277.81 | 3683.34 | 0.00 | 0 |
| 9. கல்வி, விளையாட்டுப் போட்டிகள், கலைகள் | 53653.53 | 16096.06 | 16086.96 | 9.98% |
| 10. மக்கள் நல்வாழ்வு | 41802.91 | 12540.87 | 7730.38 | 8.49% |
| 11. குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி | 97548.30 | 29264.49 | 0.00 | 0 |
| 12. செய்தி - விளம்பரம் | 104.14 | 31.24 | 0.00 | 0 |
| 13. ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 49238.12 | 14771.44 | 1580.40 | 3.21% |
| 14. தொழிலாளரும் தொழிலாளர் நலனும் | 6592.60 | 1977.78 | 49.73 | 0.75% |
| 15. சமூக நலன் மற்றும் சத்துணவு | 128088.03 | 38426.41 | 33331.74 | 6.02% |
| 16. ஏனைய சமூக சமுதாய நலப் பணிகள் | 3766.05 | 1129.82 | 0.00 | 0 |
| 17. பொதுவான பணிகள் | 7648.13 | 2294.44 | 0.00 | 0 |
| **பெரு மொத்தம்** | **967584.54** | **290275.36** | **58784.14** | **6.08%** |

ஆதாரம் : வரவு செலவுத் திட்ட இணைப்பு, ஆண்டுத் திட்டம் 2007-08, தமிழக அரசு.

## 2005-06ம் ஆண்டிற்கான கணக்கு குறித்த விரிவான ஆய்வு:

NIPCCD மற்றும் பெண்கள் சிறப்புக்கூறுத் திட்ட வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு, 2005-06ம் ஆண்டிற்கான கணக்கு குறித்த விரிவான ஆய்வை நாங்கள் மேற்கொண்டோம். இந்த ஆண்டில், அனைத்து துறைகளிலும் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு மிகவும் குறைவு. பெரும்பான்மைத் துறைகள் பாலின விழிப்புணர்வின்றி, பாலின நோக்குநிலையற்ற குருடர்களாக உள்ளனர் (பார்க்க-பக்கம் 36). இருக்கின்ற 17 துறைகளில் 6 துறைகள் மட்டுமே பெண்களுக்கானத் திட்டங்களை வகுத்துள்ளனர். அந்த 6 துறைகளிலும், ஒன்றுகூட பெண்கள் சிறப்புக்கூறுத் திட்டத்தின் குறைந்தபட்ச ஒதுக்கீடான 30%-த்தை பெண்களுக்கென ஒதுக்கவில்லை.

வேளாண் மற்றும் வேளாண்சார்ந்த துறையில் பெண்களுக்கான ஒதுக்கீடு 0.1% மட்டுமே.

கல்வி, விளையாட்டு மற்றும் கலைத்துறையில் 29.98% பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்ட செலவினத்தில் வெறும் 18.49% மட்டுமே நல்வாழ்வுத்துறையில் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

தலித், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் வெறும் 3.21% மட்டுமே பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலத்துறையில் வெறும் 0.75% மட்டுமே திட்ட செலவினங்களிலிருந்து பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

இருக்கின்ற 17 துறைகளில் 11 துறைகள் பாலின விழிப்புணர்வின்றி, பாலின நோக்குநிலையற்ற குருடர்களாக உள்ளனர். அவை பின்வருமாறு:

1. ஊரக வளர்ச்சித்துறை
2. பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு
3. எரிசக்தி
4. தொழிற்சாலை மற்றும் தாதுப்பொருட்கள்
5. போக்குவரத்து மற்றம் தகவல் தொழில்நுட்பம்
6. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்
7. பொதுப் பொருளாதாரப் பணிகள்
8. குடிநீர் வழங்கல், குடியிருப்பு மற்றும் நகர்புற மேம்பாடு
9. செய்தி மற்றும் விளம்பரம்
10. பிற சமூக மற்றும் சமுதாய நலப்பணிகள்
11. பொதுப் பணித்துறை

2005-06ம் ஆண்டிற்கான திட்ட செலவினங்கள் 967584.54 லட்சம். பெண்கள் சிறப்புக்கூறுத் திட்ட ஒதுக்கீட்டிற்கான (30%) பரிந்துரையின்படி, பெண்களுக்கான ஒதுக்கீடப்பட வேண்டிய தொகை 290275.36 லட்சம். ஆனால், கணக்கு புத்தகத்தின் தகவலின்படி, பெண்களுக்காக செலவிடப்பட்ட திட்ட செலவினங்கள் 58784.14 லட்சம் மட்டுமே.

2005-06ம் ஆண்டிற்கான திட்ட செலவினத்தில், 6.08%-தான் பெண்களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

2005-06ம் ஆண்டில். பெண்களுக்கான திட்டங்களுக்கென செலவிடப்பட்ட தொகை 3.60%.

2005-06ம் ஆண்டில். பெண்கள் ஆதரவு திட்டங்களுக்கென செலவிடப்பட்ட தொகை 2.48%.

துறைவாரியாக நடத்தப்பட்ட விரிவான ஆய்வில், 2005-06ம் ஆண்டிற்கான திட்ட செலவினங்களில், மொத்தமுள்ள 48 துறைகளில் வெறும் 6 துறைகள் மட்டுமே பெண்கள் மேம்பாட்டிற்கானத் திட்டங்களை வகுத்துள்ளது.

## பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டமும் பெண்களுக்கான ஒதுக்கீடும்
## (2005-06 கணக்குகள்)

*(ரூபாய் இலட்சத்தில்)*

| வ. எண் | துறைகள் / வளர்ச்சித் தலைப்புகள் | திட்ட ஒதுக்கீடு | பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டப்படி பெண்களுக்கு உரித்தான பங்கு (30%) | வரவு-செலவுத் திட்ட இணைப்பு நூல் காட்டும் நிதியளவு |
|---|---|---|---|---|
| **வேளாண்மையும் அது தொடர்பான பணிகளும்** | | **49261.47** | **14778.44** | **4.93** |
| 1 | பயிர் வளர்ப்பு | 8099.12 | 2429.74 | 4.93 |
| 2 | ஆராய்ச்சி - கல்வி | 6177.93 | 1853.38 | 0.00 |
| 3 | உணவுப் பொருள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி | 19.42 | 5.83 | 0.00 |
| 4 | மண் வள - நீர் வள பாதுகாப்பு | 6471.15 | 1941.35 | 0.00 |
| 5 | கால்நடை வளர்ப்பு | 1742.73 | 522.82 | 0.00 |
| 6 | பால் பண்ணை வளர்ச்சி | 59.49 | 17.85 | 0.00 |
| 7 | மீன் வளம் | 2423.66 | 727.10 | 0.00 |
| 8 | கானக வளம் | 13908.64 | 4172.59 | 0.00 |
| 9 | வேளாண்மை நிதி உதவி நிறுவனங்களில் முதலீடு | 0.00 | 0.00 | 0.00 |
| 10 | கூட்டுறவு | 13908.64 | 4172.59 | 0.00 |
| **ஊரக வளர்ச்சி** | | **153223.88** | **45967.16** | **0.00** |
| 11 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டம் | 50998.38 | 15299.51 | 0.00 |
| 12 | நிலச்சீர்திருத்தங்கள் | 0.00 | 0.00 | 0.00 |
| 13 | சமுதாய வளர்ச்சி | 102225.50 | 30667.65 | 0.00 |
| **பாசனம், வெள்ளக்கட்டுப்பாடு** | | **27955.49** | **8386.65** | **0.00** |
| 14 | சிறுபாசனம் | 6277.23 | 1883.17 | 0.00 |
| 15 | பாசனப் பகுதி மேம்பாடு | 2021.25 | 606.38 | 0.00 |
| 16 | பெரும் பாசனமும் நடுத்தர பாசனமும், வெள்ளக்கட்டுப்பாடும் | 19657.01 | 5897.10 | 0.00 |

| வ. எண் | துறைகள் / வளர்ச்சித் தலைப்புகள் | திட்ட ஒதுக்கீடு | பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டப்படி பெண்களுக்கு உரித்தான பங்கு (30%) | வரவு-செலவுத் திட்ட இணைப்பு நூல் காட்டும் நிதியளவு |
|---|---|---|---|---|
| **மின் சக்தி** | | **100972.88** | **30291.86** | **0.00** |
| 17 | மின் விசை மேம்பாடு | 100663.70 | 30199.11 | 0.00 |
| 18 | மரபு சாரா எரி சக்தி வாயில்கள் | 309.18 | 92.75 | 0.00 |
| **தொழிலும் கனிமப் பொருட்களும்** | | **47969.93** | **14390.98** | **0.00** |
| 19 | நடுத்தர பெருந்தொழில்கள் | 6738.40 | 2021.52 | 0.00 |
| 20 | கிராமத் தொழில்களும் சிறுதொழில்களும் | 41208.62 | 12362.59 | 0.00 |
| 21 | எடைகளும் அளவைகளும் | 0.00 | 0.00 | 0.00 |
| 22 | சுரங்கம் வெட்டுதல், உலோகவியல் தொழில்கள் | 22.91 | 6.87 | 0.00 |
| **போக்குவரத்தும் சாலைகளும்** | | **187163.68** | **56149.10** | **0.00** |
| 23 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 100.00 | 30.00 | 0.00 |
| 24 | சாலைகளும், பாலங்களும் | 176716.99 | 53015.10 | 0.00 |
| 25 | சாலை போக்குவரத்து-உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து | 10346.69 | 3104.01 | 0.00 |
| **அறிவியல் தொழில் நுட்பவியல் சுற்றுச் சூழல்** | | **317.59** | **95.28** | **0.00** |
| 26 | அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் | 224.56 | 67.37 | 0.00 |
| 27 | உயிரின வாழ்க்கைச் சூழலும் சுற்றுச் சூழலும் | 93.03 | 27.91 | 0.00 |
| **பொதுப் பொருளாதாரப் பணிகள்** | | **12277.81** | **3683.34** | **0.00** |
| 28 | தலைமைச் செயலகம் - பொருளாதாரப் பணிகள் | 10326.49 | 3097.95 | 0.00 |
| 29 | சுற்றுலா | 1706.08 | 511.82 | 0.00 |
| 30 | பொருளாதார ஆலோசனையும் புள்ளி விவரங்களும் | 66.74 | 20.02 | 0.00 |
| 31 | நுகர் பொருள் வழங்கல் | 178.50 | 53.55 | 0.00 |
| **கல்வி, போட்டி விளையாட்டுகள், கலைகள்** | | **53653.53** | **16096.06** | **16086.96** |
| 32 | பொதுக் கல்வி | 46101.61 | 13830.48 | 16086.96 |
| 33 | தொழில் நுட்பக் கல்வி | 5325.98 | 1597.79 | 0.00 |
| 34 | கலையும் பண்பாடும் | 459.84 | 137.95 | 0.00 |
| 35 | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகள் | 1766.10 | 529.83 | 0.00 |

| வ. எண் | துறைகள் / வளர்ச்சித் தலைப்புகள் | திட்ட ஒதுக்கீடு | பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டப்படி பெண்களுக்கு உரித்தான பங்கு (30%) | வரவு-செலவுத் திட்ட இணைப்பு நூல் காட்டும் நிதியளவு |
|---|---|---|---|---|
| **மக்கள் நல்வாழ்வு** | | **41802.91** | **12540.87** | **7730.38** |
| 36 | மருத்துவம் | 28350.78 | 8505.23 | 0.00 |
| 37 | பொதுச் சுகாதாரம் | 13452.13 | 4035.64 | 7730.38 |
| **குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, நகர் பகுதி வளர்ச்சி** | | **97548.30** | **29264.49** | **0.00** |
| 38 | குடிநீர் வழங்கலும் துப்புரவும் | 59320.58 | 17796.17 | 0.00 |
| 39 | வீட்டு வசதி | 5480.55 | 1644.17 | 0.00 |
| 40 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 32747.17 | 9824.15 | 0.00 |
| **செய்தி - விளம்பரம்** | | **104.14** | **31.24** | **0.00** |
| 41 | செய்தி விளம்பரம் | 104.14 | 31.24 | 0.00 |
| **ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்** | | **49238.12** | **14771.44** | **1580.40** |
| 42 | ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 49238.12 | 14771.44 | 1580.40 |
| **தொழிலாளரும், தொழிலாளர் நலனும்** | | **6592.60** | **1977.78** | **49.73** |
| 43 | தொழிலாளரும், தொழிலாளர் நலனும் | 6592.60 | 1977.78 | 49.73 |
| **சமூக நலன் மற்றும் சத்துணவு** | | **128088.03** | **38426.41** | **33331.74** |
| 44 | சமூக நலன் | 62664.92 | 18799.48 | 33331.74 |
| 45 | சத்துணவு | 65423.11 | 19626.93 | 0.00 |
| **ஏனைய சமூக - சமுதாய நலப் பணிகள்** | | **3766.05** | **1129.82** | **0.00** |
| 46 | ஏனைய சமூக - சமுதாய நலப் பணிகள் | 3766.05 | 1129.82 | 0.00 |
| **பொதுவானப் பணிகள்** | | **7648.13** | **2294.44** | **0.00** |
| 47 | எழுது பொருள் - அச்சுத்துறை | 99.57 | 29.87 | 0.00 |
| 48 | பொதுப் பணிகள் | 7548.56 | 2264.57 | 0.00 |
| | **பெரு மொத்தம்** | **967584.54** | **290275.36** | **58784.14** |

*(மாநில ஆண்டு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மட்டுமே கணக்கில் எடுக்கப்பட்டுள்ளன)*
*ஆதாரம் : ஆண்டு திட்டம் - வரவு செலவுத் திட்ட இணைப்பு, 2007-08, தமிழக அரசு)*

## 2006-07ம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட செலவினங்கள் மற்றும் 2007-08க்கான செலவினங்கள் குறித்த ஆய்வு:

2006-07ம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட செலவினங்கள் மற்றும் 2007-08க்கான செலவினங்கள் குறித்து நாங்கள் நடத்திய ஆய்வில் கீழ்காணும் போக்குகள் தெரிகின்றன.

தமிழகத்தின் மொத்த திட்ட செலவினங்களில் 6.40% 2006-07ம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட செலவினத்திலும் 6.70% 2007-08க்கான செலவினத்திலும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெண்களுக்கான திட்டங்களுக்கென 4.17% 2006-07ம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட செலவினத்திலும் 4.09% 2007-08க்கான செலவினத்திலும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் ஆதரவு திட்டங்களுக்கென 2.23% 2006-07ம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட செலவினத்திலும் 1.74% 2007-08க்கான செலவினத்திலும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாநிலங்கள் மற்றும் மத்திய அளவிலான நிதிநிலையறிக்கைகளில் பாலின கண்ணோட்டம் கொண்டுவரப்பட்டிருப்பினும், தமிழகத்தில் இன்றளவும் நிதிநிலையறிக்கையில் பாலின கண்ணோட்டம் இல்லை. சமுக மேம்பாட்டில் தமிழகத்தைவிட பெரிதும் பின்தங்கிய மாநிலங்கள் கூட பாலின கண்ணோட்டத்தில் நிதிநிலையறிக்கையை தாக்கல் செய்யும் துவக்க முயற்சியை எடுத்துள்ளன.**

**தமிழ்நாட்டின், 2008-09ம் ஆண்டிற்கான நிதிநிலையறிக்கையிலும் பாலின கண்ணோட்டம் இல்லை. பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் மற்றும் பெண்களின் அதிகாரத்தை மையப்படுத்திய ஒருங்கிணைந்த கொள்கைகளும் மிகவும் துவக்க நிலையில், பெயரளவில் உள்ளன.**

# பாகம் IV

## பின் இணைப்புகள்

அ. பாலின நிதிநிலையறிக்கை குறித்த CBGA-வின் பரிந்துரைகள்- சுருக்கம்

ஆ. பாலின கருத்தாக்கம் குறித்த சிறப்பு வார்த்தை பிரயோகங்களின் விளக்கங்கள்

இ. எழுதுவதற்கு உதவியவை

## இணைப்பு அ

### பாலின நிதிநிலையறிக்கை குறித்த சிஙிநிகி-வின் பரிந்துரைகள்- சுருக்கம்

மனிதவள மேம்பாடு அமைச்சரகம், பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித்துறையின் பொருளாதார ஆலோசகரிடம், புதுடெல்லியின் நிதிநிலையறிக்கை மற்றும் ஆளுகையின் பொறுப்புடைமை மையம் (*சிமீஸீகூஷீ கூஷீமீ யீஷீகூஷீ ஙிமீபீரீமீகூஷீ ணீஸீபீ நிஷீஸ்மீகூஷீஸீணீஸீநீமீ கிநீநீஷீமீஸீகூஷீணீதீவீறீவீகூஷீஹ்*) 2006 ஜூலை 24 அன்று 11வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் பாலின நிதிநிலையறிக்கைக்கான பரிந்துரைகளை அளித்தது. (இந்த அமைப்பின் நிறுவன உறுப்பினர்களில் சமூகக் கண்காணிப்பும் ஒருவராகும்) மிக முக்கியமான பரிந்துரைகளைக் கீழே தருகிறோம்.

1. அனைத்துத் அமைச்சரகங்களுக்கும் துறைகளுக்கும் **கீசிறி** யை விரிவாக்க வேண்டும். காலம் காலமாக பெண்கள் தொடர்பானவை என்ற கருதப்பட்டுவரும் அமைச்சரங்கள் அல்லது துறைகளுக்குள் அதனைக் குறுக்கிவிடக்கூடாது.

2. 11 ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நகல் அணுகுமுறை அறிக்கையின் நீர்த்துப்போன மொழியை நாங்கள் கவலையுடன் கணக்கில் கொள்கிறோம். அது பாலின சரிக்கட்டலை எட்டுவதற்கான 'பொருத்தமான ஏற்பாடுகள்' பற்றி பேசுகிறது(நிமீஸீபீமீகூஷீ ஙிணீறீணீஸீநீவீஸீரீ, ஷிமீநீகூஷீவீஷீஸீ 5.6, ணீஸீபீ ஜீணீரீமீ 64).இது கீசிறி யின் கீழ் 30% அளிப்பது என்ற வாக்குறுதியில் இருந்து பின்வாங்குவதாகும். **கீசிறி யின் கீழ் பெண்களுக்கு 30 சதம் ஒதுக்கீடு செய்வது என்ற அரசின் முந்தைய வாக்குறுதியை அரசு மறுவுறுதிசெய்ய வேண்டு என்று நாங்கள் விரும்புகிறோம்.** சுகாதாரம் கல்வி போன்ற முக்கியமான சமூகத்துறைகள் பொதுப்பட்டியலில் இருக்கின்றன என்தை மனதில்கொண்டு, **கீசிறி யை மாநில அரசுகளும் நடைமுறைபடுத்த வேண்டும் என்ற திட்டக் கமிஷன் நிர்ப்பந்தம் செய்ய வேண்டும்.**

3. பெண்களுக்குக் கணிசமாகப் பலன் அளிக்கக் கூடியது என்று எதிர்பார்க்கப்படும் பல்வகை திட்டங்களுக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவு பற்றி பேசுகின்ற 2005-06 ஆம் ஆண்டு நிதிநிலையறிக்கை வரலாற்றில் முதன் முறையாக பாலின நிதிநிலையறிக்கை பற்றிய கூற்றும் இணைக்கப்பட்டுள்ளது.

   2005-06ல் இந்த முயற்சியின் கீழ் 10 துறைகள் வருகின்றன. இந்திய அரசின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 2.8 சதம் பாலின நிதிநிலையின் கீழ் வருகிறது. 2006-2007ல் 24 துறைகள் இணைக்கப்பட்டன. மொத்த இந்திய அரசின் நிதிநிலையில் 5.1 சதம் வரை பாலின வரவு செலவு நிதிநிலையின் கீழ் வருகிறது. ஆனால்,

இப்பிரச்சனையை மிக நெருக்கமாக ஆய்வு செய்து பார்க்கும்போது இந்த முயற்சியில் பாரதூரமான பின்னடைவுகள் தென்படுகின்றன. அவற்றை சரி செய்தே ஆகவேண்டும். எனவே, இது போன்ற விவரங்களை வந்தடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட அனுமானங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்றும் இந்த முயற்சியை உள்ளார்ந்த அக்கறையுடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசை வலியுறுத்துகிறோம்.

4. பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சரங்களில் உருவாக்கப்பட்டுள்ள பாலின நிதிநிலை அறிக்கை செல்களின் திறனையும் வளர்த்தெடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்ற அரசைக் கோருகிறோம்.

5. பெண்களுக்கான திட்டங்களை இனம்காண்பது, பெண்களுக்கான நிதி ஒதுக்கீடு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று கூட்டி கழிப்பதுதான் தற்போது பாலின நிதிநிலை அறிக்கைக்கான வேலையாக இதுவரைக் கருதப்பட்டுவருகிறது. ஆனால், பாலின நிதிநிலையாக்கம் என்பது இதனைத் தாண்டிச் செல்வதாக இருக்க வேண்டும் என்பது தெளிவு. பாலின நிதிநிலையாக்கத்தை இன்னும் ஒருங்கிணைந்த முறையில் அரசு நோக்க வேண்டும் என்ற நாங்கள் கருதுகிறோம். பாலின நிதிநிலையாக்கம், குறைந்தபட்சம், (தென்னமெரிக்காவில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டுவரும்) பின்வரும் ஐந்து கட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

   அ) பெண்களின் நிலையைக் மதிப்பிடுதல்

   ஆ) கொள்கைகள் பாலினப்பிரச்சனைகளுக்கு எதிர்வினையாற்றும் வகையை மதிப்பிடுவது

   இ) நிதி ஒதுக்கீட்டை மதிப்பீடு செய்வது

   ஈ) செலவினம் மற்றும் சேவையளிப்பைக் கண்காணிப்பது மற்றும்

   உ)விளைவுகளை மதிப்பீடு செய்வது

6. திட்டச் செலவினம் என்பதிலிருந்து திட்டத்தின் விளைவு என்பதை நோக்கி நாம் நகர வேண்டும் என்ற நகல் அணுகுமுறைத் தாளின்

   கூற்றை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், பாலின நோக்கு நிலையிலிருந்து விளைவுகள் பற்றிய விவரங்களைப் பெறுவது சாத்தியமில்லை என்று ஆகிவிடவில்லை என்றாலும், மிகவும் சிரமமான வேலையாக ஆகிவிட்டது. இதற்கு பிரித்தளிக்கப்பட்டது பற்றிய புள்ளி விவரங்கள் கிடைக்காமையே.

புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும்போதே பால் மற்றும் பாலின அடிப்படையில் விவரங்களைப் பிரித்துச்சேகரிப்பதைக் கட்டாயம் ஆக்க வேண்டும்.

7. பெண்கள் சிறப்புக் கூறுத் திட்டமும் பாலின நிதிநிலையாக்கமும் அத்தியாவசியமானவை, அவற்றை ஒன்றிணைத்தே பயன்படுத்த வேண்டும். பாலின நிதிநிலையாக்கம் என்பது ஓர் அணுகுமுறை என்றும் பெண்கள் சிறப்புக் கூறுத் திட்டம் அதற்கான நல்லதொரு அடையாளம் என்றும் நாங்கள் கருதுகிறோம். அதுமட்டுமல்லாமல் அரசால் ஒதுக்கப்பட்ட நிதி பெண்களைச் சென்று சேர்வதை உறுதி செய்வதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதனைச் சாதிப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும்,அதேசமயம் மத்தியிலும், காலாவதியாகாத நிதிக்குவிமானம் ஒன்றை பெண்களுக்கென்று ஏற்படுத்த வேண்டும். பெண்களுக்கான குறிப்பானத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏதேனும் ஒரு (மத்திய/மாநில) அமைச்சரகத்தில் பயன்படுத்தப்படாமல் மிச்சமிருக்கும் என்றால் அதனை இந்த காலாவதியாகாத நிதிக்குவிமானத்திற்கு மாற்றிவிட வேண்டும்.
8. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப பாதுகாப்பதற்கான சட்டம் 2005 ஐ அமுல்படுத்துவதற்குத் தேவையான நிதியை 11வது ஐந்தாண்டுத் திட்டம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இறுதயாக, ஒட்டு மொத்த பொருளாதார அரசியல் சூழலிலிருந்து தனிமைப்படுத்தி பாலின நிதிநிலையாக்கத்தைப் பார்க்க முடியாது. (எனவே, அரசின் ஒட்டுமொத்தக் கொள்கைகள்) சந்தையும் லாபமும்தான் அதி உன்னதமானவை என்றும் மேலிருந்து கீழ் நோக்கி கசிந்துவரும் வளத்தைக் கொண்டுதான் ஓரங்கட்டப்பட்டவர்களின் பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நவ தாராளவாதக் கருத்தியலின் கீழ் பட்டவை என்றால், பாலின நிதிநிலையாக்க முயற்சிகள் பொருளற்றவையாகிப்போகின்றன. மனித உரிமைகளைப் பாதுகாப்பது, குறிப்பாக பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது என்பதை மையமாகக் கொண்டுதான் அனைத்துக்குமான கொள்கைகள் அமைய வேண்டும்.

✲✲✲✲

## இணைப்பு ஆ

## பாலின கருத்தாக்கம் குறித்த சிறப்பு வார்த்தை பிரயோகங்களின் விளக்கங்கள்

1. **பாலினம்**

   **ஆணும் பெண்ணும் சமூக, கலாச்சார ரீதியாக அன்றாட வாழ்க்கையில் ஆற்றும் சமூகப் பாத்திரமே பாலினம். வீட்டிலும், வேலையிலும், அரசியலில் கட்டமைப்பிலும் வெளிப்படுகின்ற ஆண்ணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான சமத்துவமின்மை என்கிற கருத்தாக்கத்தை வெளிப்படுத்தும் கருவியாகவும் பாலினம் உள்ளது.**

2. **பாலின ஆய்வு**

   **ஆண், பெண் மேம்பாட்டில் உள்ள வேறுபாடுகளை முறையான வகையில் ஆய்வு செய்வது. வேலையில் உள்ள ஆண், பெண் பாகுபாடுகள் மற்றும் பாலியல் ரீதியான மதிப்பீடுகளையும் புரிந்துகொள்ள இந்த ஆய்வு உதவுகிறது. வளர்ச்சி மற்றும் மேம்பாட்டின் ஒவ்வொரு காலகட்டத்திலும் பாலின ஆய்வு செய்தல் அவசியம். ஒரு குறிப்பிட்ட செயல்பாடு, முடிவு அல்லது திட்டம் பெண்களைவிட ஆணுக்கு எவ்வாறு சிறப்பானதாக அமைகிறது என்பதை ஒவ்வொருவரும் கட்டாயம் புரிந்து கொள்ள வேண்டும்.**

3. **பாலின விதிகளை மீறுபவர்கள்**

   **பாலின எல்லைகளை, மரபுகளை மீறுபவர்கள், அதற்கு சவால் விடுபவர்கள்தான் பாலின விதிகளை மீறுபவர்கள் ஆவர். வழக்கமான ஒரேமாதிரியான தன்மைகளை, அதாவது உடை, தோற்றம், பாலினப் பாத்திரங்கள் ஆகியவற்றை மீறுவது பற்றி அரசியல் குரல் எழுப்புபவர்களை, பொதுவாக பாலின விதிகளை மீறுபவர்கள் என்று குறிப்பிடுவர்.**

4. **பாலினக் குருடர்**

   **சமூகத்தில் ஒருவர், தான் எவ்வாறு வாழ்வது என்பதைத் தீர்மானிப்பதில், பாலினம் ஒரு முக்கியமான பாத்திரம் வகிக்கிறது என்பதை அங்கீகரிக்க மறுப்பவர்கள்.**

5. **பாலினக் குருட்டுக் கொள்கை**

   **ஆணுக்கும் பெண்ணுக்குமான மாறுபட்டஙத தேவைகளை உணர்ந்து அதனை பூர்த்தி செய்யாத கொள்கைகளை, பாலின கருத்தாக்கத்திற்கு முக்கியத்துவம் தராத கொள்கைகளை பாலினக் குருட்டுக் கொள்கை என்கிறோம்.**

6. **பாலின அடையாளம் பெறுதல்**

   **ஆணும் பெண்ணும் இவ்வாறு இருப்பதுதான் இயற்கையானது என்று இச்சமூகம் வகுத்துள்ள விதிமுறைகளை பழக்க, வழக்கத்தின் மூலம் கற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தும் நிகழ்வுப் போக்கு.**

## 7. பாலினப் பாகுபாடு

சுதந்திரமாக இயங்குவதை, பாலியல் நம்பிக்கைகளை அல்லது வேறு நம்பிக்கைகளை முழுமையாக அல்லது பகுதியளவுக்கு தடைசெய்வதை, பாதிப்பான நிலைக்குத் தள்ளுவதை, பாதிப்பு ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சமான நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளை பாலினப் பாகுபாடு என்று அழைக்கிறோம்.

## 8. பாலின வேலைப்பிரிவினை

ஆணும் பெண்ணும் செய்கின்ற மாறுபட்ட வேலைகளின் தன்மை மற்றும் அதற்கான மதிப்பிடுகளில் உள்ள வேறுபாடுகள். இது சமூகத்திற்கு சமூகம், அதன் கலாச்சாரத்தைப் பொறுத்து மாறுபடும். புறச்சூழல்களினாலும் இது வேறுபடும்.

## 9. பாலினச் சமத்துவம்

சட்டம் மற்றும் கொள்கைகளில்ஆணும் பெண்ணும் சமம் என்பதை வலியுறுத்துவதுதான் பாலினச் சமத்துவம். குடும்பம், சமூகக் குழுக்கள் மற்றும் சமூகத்திலுள்ள வளங்களை ஆணும் பெண்ணும் சமமாக அனுபவிப்பது என்பதும் பொருள்

## 10. பாலினச் சமச்சீர்நிலை

சலுகைகள் மற்றும் பொறுப்புகளில் நியாயமான பங்கீடுகளை ஆணுக்கும் பெண்ணுக்கும் அளிப்பது. பெண்களுக்கு சாதகமான திட்டங்களை உருவாக்குவதன் மூலம், தற்போது சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையை முடிவுக்கு கொண்டு வருவது பாலனச் சமச்சீர்நிலையைக் கொண்டுவருவதற்கு தேவையானதாக இருக்கும்.

## 11. பாலினத்தை மையப்டுத்திய கொள்கைகள்

பாலினத்தை மையப்டுத்திய கொள்கைகள் என்பது குறிப்பானதோர் பாலினத்தை சென்று சேரும் வகையில் குறிப்பான சலுகைகள் அளிப்பது, அதன்மூலம் சில குறிப்பான பாலினத் தேவைகளை பூர்த்தி செய்வது. வளங்களையோ அல்லது பொறுப்புகளிலுள்ள பிரிவினைகளையோ இந்தக் கொள்கைகள் கையாள்வதில்லை.

## 12. பாலினத்தை மாற்றுவதற்கான கொள்கைகள்

தற்போதுள்ள சூழலில் பாலினத்தின் குறிப்பான தேவைகள் மற்றும் தடைகளை பாலினத்தை மாற்றுவதற்கான கொள்கைகள் இனம் காண்கின்றன. அதுமட்டுமல்லாமல், தற்போதுள்ள பாலின உறவுகளை மேலும் சமத்துவமான திசையில் மாற்றியமைக்க முயல்கின்றன. பாலின மாற்றத்தைக்கொண்டுவர முயலும் கொள்கைகளை இலக்காகக் கொள்ளும்போது தற்போதிருக்கும் கட்டமைப்பிற்குள் சயல்பட்டு அந்த இலக்குகளை அடைவதும் சாத்தியமானதாக இருக்க வேண்டும்.

## 13. பாலினக் கண்ணோட்டம்

ஆணுடன் ஒப்பிடும்போது பெண்கள் பாலியல் ரீதியான பன்முக அடிமைத்தனத்தில் தள்ளப்பட்டிருக்கிறார்கள் பாரபட்சமான அணுகுமுறைக்கு ஆளாகிறார்கள் என்பதை இனம் காணுதல்.

## 14. பாலினத் திட்டங்கள்

திட்டங்கள், அமைப்புகள் மற்றும் சமூகக் கட்டமைப்புகளை பாலினக் கண்ணோட்டத்தில் ஆராய்வதற்கான ஓர் கருவியே பாலினத் திட்டமாகும். திட்டங்களை நீண்டகால நோக்கத்துடன் ஆய்வு செய்வதன் மூலம், பாலின சமத்துவத்தை கொண்டு வருவதும் இதன் நோக்கமாகும்.

## 15. பாலின கூர்மையுணர்வுள்ளத் திட்டங்கள்

தற்போதுள்ள விரும்பத்தகாத சமத்துவமின்மைக்கு மாறாக, விரும்பத்தகுந்த சமத்துவமான எதிர்கால சூழலை, சாத்தியமான வகையில் உருவாக்குவதற்காக பெண்ணும் ஆணும் பகுத்தறிவுடன் முடிவெடுக்கும் நிகழ்வுப் போக்கே பாலினக் கூர்மையுள்ளத் திட்டமிடல் என்று அறியப்படுகிறது. தற்போதுள்ள விரும்பத்தகாத நிலைமைகளையும் சூழலையும் மாற்றியமைப்பதற்காக பெண் மற்றும் ஆணின் நிலை மற்றும் சூழல் பற்றிய சாரமான விவரங்களை அது அளிக்கிறது.

## 16. பெண்களின் ஆளுகை

பெண்களின் என்பது தொடர்ந்து முன்செல்லும் இயங்காற்றல் உள்ள நிகழ்வுப்போக்காகம். தங்களை அடிமைப்படுத்தியுள்ள கட்டமைப்புகள் மற்றும் கருத்தியலை மாற்றியமைப்பதற்கான பெண்களின் திறனை அது மேம்படுத்துகிறது. முடிவெடுத்தல் வள ஆதாரங்களை பெறுதல், தங்களின் வாழ்க்கை மீது கூடுதல் கட்டுப்பாடு செலுததுதல், கூடுதல் சுயேச்சைத் தன்மை பெறுதல் ஆகியவற்றைப் பெற இந்த நிகழ்வுப் போக்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

பெண் தன்னைப் பற்றிக் கொண்டுள்ள பிம்பத்தையும் சமூகம் கொண்டுள்ள பிம்பத்தையும் மேண்மைபடுத்தும் நிகழ்வுப் போக்கே ஆளுகை எனப்படுகிறது. அது மேல் கீழான பாலின உறவுகளை மட்டுமல்லாமல் சமூகத்தில் உள்ள அனைத்து மேல் கீழான உறவுகளையும் சாவலுக்கு இழுப்பதற்கான ஆற்றலை அது பெண்களுக்கு வழங்குகிறது.

*Source:Initiatives: Women In Development (IWID), 2002.*

## பின் இணைப்புகள் : இ
## துணை நின்ற நூல்கள்

Government documents:


- “Gender Budget Analysis of Selected States - An Initiative (Draft)”, by Department of Women & Child Development, Government of India and National Institute of Public Co-operation & Child Development, November 2002.

- “Gender Budget Initiative”, Annual Report 2002-2003, Department of Women and Child Development, Government of India.

- “Budgeting for Gender Equity - a step forward”, Annual Report 2005-2006, Ministry of Women and Child Development, Government of India.

- “Gender Responsive Budgeting for Department of Women and Child Development”, The Department of Planning Evaluation Organization, Government of Rajasthan, April 2006.

- “Towards Faster and More Inclusive Growth: An Approach to the 11th Five Year Plan”, Planning Commission, Government of India, Draft - July & December 2006.

- Plan-Budget Link Books (1999 - 2008), Finance Department, Budget Publication, Government of Tamilnadu.

<u>Private documents:</u>

1 “Government of India Budget 2000-2001 and GENDER”, by Manju Senapaty, Paper Presented at the Inter-Agency workshop on Improving the effectiveness of Integrating Gender into Government Budgets, organized by Commonwealth secretariat, London, 26-27 April 2000.

1 “Strengthening Parliamentary Governance through Gender Budgeting: The Experience of Three African Countries”, by Winnie Byanyima, International Workshop on Gender Auditing of Government Budgets, 2001.

1 “Gender Budget - A Case Study of India”, by Dr. Vibhuti Patel, 2003.

1 “State Gender Development Report 2005”, National Productivity Council, 2005.

1 “India’s Roadmap For Women”, By Deepti Priya Mehrotra, www.gorkhapatra.org, Editorial, 18th September 2006.

1 “Gender Budgeting at the Gram Panchayat Level - Kerala Experience” by Dr.Mridul Eapen, paper presented at the Gender Just Budgeting workshop organized by Women Power Connect, October 2006.

1 “UNIFEM’S initiative on Gender Responsive Budgeting”, By Sara Pilot, paper presented at the Gender Just Budgeting workshop organized by Women Power Connect on October 2006.

1 “What is Gender Budgeting? Public Policies from Women’s Perspective in the Indian Context”, by Nirmala Bannerjee, Sachetana, UNIFEM.

1 “Budget 2008-09: Reaffirming Rhetoric? Response to the Union Budget 2008-09”, Centre for Budget and Governance Accountability, March 2008.

Publications by Social Watch -Tamilnadu:

- “Social Development of Dalits and Tamilnadu Government Budget - A critique”, Tamilnadu Peoples’ Forum for Social Development, 1999.
- “Budget Analysis as Social Audit”, Tamilnadu People’s Forum for Social Development, 2002.
- “Women Component Plan (A Holistic Gender Budgeting Tool)” by Manu Alphonse, paper presented at the Gender Budget Workshop at Utkal University, Orissa, India, 2003.
- “Special Component Plan - Dalit Hopes Betrayed?”, Social Watch - Tamilnadu, 2004.
- “Towards Gender Budgeting in Tamilnadu - Perspectives for Gender Budgeting at the Provincial (State) Level”, By Ms. S. Kamatchi, Paper presented at the International Conference on Gender Mainstreaming Government Finances in South East Asian Countries, Organized by Centre for Women’s Studies, Sri Padmavati Mahila Visvavidyalayam, Tirupati, 2007.

* * * * *

‘சமூகக் கண்காணிப்பு - தமிழ்நாடு’ என்பது பொதுக் கொள்கைகளை ஆய்வு செய்வது மற்றும் வழக்குரைத்தல் மேற்கொள்ளும் அமைப்பாகும். தென்னிந்தியாவின் தமிழ்நாட்டில் இவ்வமைப்பு செயல்படுகிறது. 1995 முதல் 2003 வரையிலான எட்டு ஆண்டுகளில் ‘சமூக வளர்ச்சிக்கான தமிழ்நாடு மக்கள் அமைப்பு’ (Tamilnadu Peoples’ Forum for Social Development) செயல்பாட்டின் அனுவங்களை ‘சமூகக் கண்காணிப்பு-தமிழ்நாடு’ தனது அடித்தளமாகக் கொண்டுள்ளது. இவ்வமைப்பின் அறிவுத்துறைச் செயல்பாடாக ‘சமூகக் கண்காணிப்பு-தமிழ்நாடு‘ 2004ல் துவங்கப்பட்டது. பொதுக் கொள்கைகள் பற்றிய ஆய்வு வழக்குரைத்தல் ஆகிவற்றில் ‘சமூகக் கண்காணிப்பு-தமிழ்நாடு‘ கவனம் செலுத்துகிறது.

தமிழ்நாட்டின் ஓரங்கட்டப்பட்ட பிரிவினராகிய தலித்துகள், பழங்குடியினர், பெண்கள், குழந்தைகள், அமைப்பாகா தொழிலாளர்கள், நாட்டு மீனவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோரின் வாழ்வாதாரம் மற்றும் சமூக பொருளாதார உரிமைகளை உத்திரவாதம் செய்யும் வகையில் ஐக்கியநாடுகள் சபையின் உடன்பாடுகளின் குறிப்பிட்டது போலவும் இந்திய அரசியல் சட்டத்தால் உத்தரவாதப்படுத்தப்பட்டுளது போலவும், தமிழக அரசின் சமூகக் கொள்கைகள் அமைவதை உறுதி செய்வதற்கு ‘சமூகக் கண்காணிப்பு-தமிழ்நாடு‘ முயற்சியெடுக்கிறது.

சமூகக் கொள்கைககளை கண்காணிக்கவும் மாற்று கொள்கைகளை உருவாக்கவும் நிதிநிலை அறிக்கையின் மீதான பிரச்சார இயக்கத்தை முதன்மை கருவியாக ‘சமூகக் கண்காணிப்பு-தமிழ்நாடு‘ பயன்படுத்துகிறது. பலவீனமான பிரிவினரின் தேவைகளுக்குப் பொருந்தி வரும் வகையில் பொதுக் கொள்கையை மாற்றியமைப்பதற்காக ஆய்வு மற்றும் வழக்குரைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அதுமட்டுமல்லாமல், மாநிலத்தில் உள்ள கொள்கை உருவாக்குபவர்கள், சமூக ஆய்வாளர்கள், சமூக செயல்பாட்டாளர்கள் ஆகியோருக்கிடையேயான ஊடகமாகவும் அது பணியாற்றுகிறது.

**தொடர்புக்கு**

**சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு**

202, சித்ரா அவென்யூ, (ஷாப்பிங் காம்பிளக்ஸ்),

எண்.9, சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை - 600 094.

தொலைபேசி : 91-44- 2374 6044 பேக்ஸ் : 91-44- 2374 6107

மின் அஞ்சல் : admin@swtn.org

இணையத்தளம் : www.swtn.org

# Gender Budgeting
# Handbook

for Government of India
Ministries/Departments/
State Governments/District Officials/
Researchers/Practitioners

Government of India
Ministry of Women and Child Development

October 2015

सत्यमेव जयते

# GENDER BUDGETING HANDBOOK

**for**

**Government of India**

**Ministries / Departments**

**State Governments /District Officials**

**Researchers / Practitioners**

Towards a new dawn

**Government of India**

**Ministry of Women and Child Development**

October 2015